விலை சதம் 5

பக்கங்கள் 4

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கையாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லோம்

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்

சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு ஐப்பசி மீ 7உ வெள்ளிக்கிழமை — Colombo, October, 24 1947 — ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 8 | இதழ் 143

பைன்னஸ், ஹாரிமன், சர்ச்சில் யுத்த வெறியர்கள்

ரஷியாவின் குற்றச்சாட்டு

சில்லியில் 200 கமியூனிஸ்ட் 'தலைவர்கள் கைது

நியூயார்க், அக். 22

யுத்தத்திற்கும் ஆக்கிரமிப்புக்கும் ஊக்கமளித்து செய்யப்பட்டு வரும் யுத்த வெறிப் பிரசாரங்களைத் தடுக்க ஒவ்வொரு நாடும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆஸ்திரேலிய அந்நிய நாட்டு மந்திரி டாக்டர். ஈவாட் ஐக்கிய நேச அரசியல் கமிட்டியில் ஓர் தீர்மானம் கொண்டு வந்தார்.

யுத்தப் பிரசாரங்களைக் கண்டித்து ரஷியப் பிரதிநிதி விஷின்ஸ்கியும் ஒரு தீர்மானம் கொண்டு வந்து அதை நிறைவேற்றும்படி கோரிப் பேசும்போது முக்கியமான சில அமெரிக்கப் பிரமுகர்களையும் யுத்த காலத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த வின்ஸடன் சர்ச்சிலையும் பலமாகத் தாக்கினார். அவர் பேசியதாவது:- அமெரிக்காவின் மாஜி அந்நிய நாட்டு மந்திரி பைன்னஸ் சோவியத் ரஷியாவுக்கு விரோதமாக பொய்யான விஷயங்களை வெளியிட்டு துவேஷப் பிரசாரம் செய்வதில் முதல் நம்பர் பேர்வழியாகி விட்டார். இந்த விதமான யுத்த வெறியர்களின் கூட்டத்தில் இப்பொழுது அமெரிக்க வர்த்தக மந்திரி ஹாரிமனும் சேர்ந்து கொண்டார். கிழக்கு ஐரோப்பிய ஆதிக்க வெறியர்களை ஒடுக்க நடவடிக்கை எடுக்கும்படி அமெரிக்க சர்க்காரைத் தூண்டிவிட அவர் முன்வந்திருக்கிறார். சர்ச்சிலோ புதிய யுத்தத்தைக் கிழப்பிவிட முனைந்திருக்கிறார். சோவியத்துக்கு விரோதமாக ஐக்கிய முன்னணி ஏற்படுத்தும்படியும் அதற்கு பிரிட்டனும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் உதவி செய்யுமென்றும், அவர் அமெரிக்காவைத் தூண்டி விடுகிறார்.

ஆஸ்திரேலிய அந்நிய நாட்டு மந்திரி பேசியபோது கூறியதாவது:- திரு. விஷின்ஸ்கி இவ்விதம் தாக்கிப் பேசுவது சரியல்ல. பைன்னஸை யுத்த வெறியர் என்று சொல்வது ஹிட்லரை சமாதான தூதர் என்று சொல்வதை யொக்கும். சோவியத் பத்திரிகைகளும் ரேடியோவும் ஓயாது அமெரிக்காவைத் தாக்கி வருவதாலேயே உலகில் யுத்த பீதி ஏற்பட்டிருக்கிறது. இந்த பிரசார சாதனங்களை அந்தந்த நாட்டு அரசாங்கம் கட்டுப்படுத்தி வெளி நாட்டு அரசாங்கங்கள்பற்றியும் தலைவர்களைப்பற்றியும் உண்மையான விஷயங்களை வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிரேசில் மீது ரஷியா குற்றச்சாட்டு

மாஸ்கோ, அக் 22

சோவியத் பத்திரிகைகள் பிரேசில் மீது குற்றஞ்சாட்டி பின்வருமாறு எழுதுகின்றன:- இன்றேல் பிரேசில் அரசாங்கம் பாசிஸட் சக்திகளுக்கு அடிபணிந்து, தனது அந்நிய எஜமானர்களது உத்தரவுக்குக் கீழ்ப்படிந்திருக்கிறது. பொதுஜன அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தவில்லை. சோவியத் உறவை பொதுஜனங்கள் மிகக் கூலாகவே வரவேற்றவர்கள்.

200 கமியூனிஸடு தலைவர்கள்

சான்டியாகோ, அக். 22

இன்று சில்லி சர்க்கார் கமியூனிஸட் கட்சிப் பத்திரிகையைச் சேர்ந்த ஒரு எல்சிக்கோ உட்பட 200 கமியூனிஸடு தலைவர்களைக் கைது செய்தனர்.

கமியூனிஸட்கட் சியைச்சேர்ந்த தலைவர்கள், பார்லிமெண்ட் அங்கத்தினர்கள், தொழிலாளர் தலைவர்கள் இவர்கள் மீது சர்க்கார் நடவடிக்கை எடுக்துக் கொள்ளப்போவதாக அறிவித்திருக்கிறார்கள்.

கொரில்லாக்கள் யுத்தம்

ஏதென்ஸ், அக். 22

பலமான ஆயுதங்களையுடைய 200 கொரில்லாக்கள் மாலிடோனியாவிலுள்ள எடஸா நகரைத் தாக்கினர். மத்திய கிரீஸில் மீண்டும் மலைப் பிரதேசத்திலுள்ள 131 கிராமங்களிலுள்ள ஜனங்களைக் காலி செய்யும்படி சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் துவேஷ பிரசாரம்

பெர்லின், அக் 22

பெர்லிங்கர் செயிட்சிஸ பின்வருமாறு எழுதுகிறது:- "சுதந்திரம் வேண்டும்; பிரிட்டிஷாருடன் போராடுங்கள்; ஜெர்மனி நீடூழி வாழ்க" என்று எழுதப்பட்டுள்ள துண்டுப் பிரசுரங்கள் பிரிட்டிஷ் பிரதேசத்திலுள்ள சர்வகலாசாலை நகரான கோயடிங்கெனில்வெளியிடப்பட்டிருக்கிறது அமெரிக்கப்பிரதேசத்திலுள்ள மாரியன்டர் நகரில் ஸவஸ்திகா கொடி பறந்துகொண்டிருந்தது.

ரூர் பிரதேசத்தில் வேலை நிறுத்தம்

யுத்த நஷ்ட ஈடாக வெளி நாடுகளுக்கு அனுப்பஇயந்திரங்களை சமற்றுவதற்கு ரூர் பிரதேசத்தில் 66 தொழிலாளர்கள் மறுத்து வேலை நிறுத்தம் செய்தார்கள். (ராய்ட்டர்)

ஆற்றில் மிதந்த பிரேதம்

சந்தேகிக்கப் பட்டவர் கைது

ஜா-எலை, அக். 23

ஜா-எலை பகுதியில் உதாபமீதா என்னுமிடத்தைச் சேர்ந்த விமான் சில்வா என்பவர் 12-ம் தேதிமுதல் காணப் படவில்லை யென்றும் கடைசியாக இப்பொழுது போலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளவருடன் அவரைக் கண்டதாகவும் தெரிகிறது. இப்பொழுது விமான் சில்வாவின் பிரேதம் டண்டுகம ஓயாவில் மிதந்து கொண்டிருந்தது கண்டு போலிஸாரால் எடுக்கப்படடுள்ளது.

நீர்கொழும்பு அசைஸகோர்ட்டில் இன்று விசாரணைக்கு வரும் ஒரு கொலை முயற்சி வழக்கில் விமான் சில்வா ஒரு சாட்சியென்றுப் இப்பொழுது சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டுள்ளவாதான் அவ்வழக்கில் எதிரியென்றும் எடுக்கப் பட்ட பிரேதத்தில் பல இடங்களில் காயங்கள் இருந்தன வென்றும் கூறப்படுகிறது.

நெல் உற்பத்தி அதிகரிக்கப்படுமா?

35 கோடி ரூபாய்க்கு உணவு இறக்குமதி

கொழும்பு, அக். 24

நெல் முதலிய உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிக்க சீக்கிரம் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிகிறது. இது சம்பந்தமாக விவசாய-உணவு மந்திரிகளின் கூட்டு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

உணவு மந்திரி ஹுரிக்கடுவையில் செய்த ஒரு பிரசங்கத்தில் இலங்கையில் 35 கோடி ரூபாய் உணவு இறக்குமதியில் செலவாவதாகக் குறிப்பிட்டு "இப்படியே இன்னும் அநேக மாதங்களுக்குப் போய்க்கொண்டிருக்க முடியாது" என்று கூறியுள்ளார்.

நீதி மந்திரி நியமனம்

கொழும்பு, அக் 24

இலங்கை நீதி மந்திரியாக டாக்டர் எல். ஏ. ராஜபக்ஷ கே. ஸி. கவர்னரால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்று நடுப்பகலில் இராணி மாளிகையில் ஸிசுவாசப் பிரமாணம் செய்து கொண்டார்.

கல்வி மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியாக திரு வி. ஈ. ஷொக்மன் கவர்னரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

உபயோகத்தில் 390 லக்ஷம் ஜவுளிக் கூப்பன்கள்

ஐந்தாவது பகுதி நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது

கொழும்பு, அக். 24

அடுத்த திங்கட்கிழமை முதல் ஜவுளிக் கூப்பன் ஐந்தாவது பகுதி அமுலுக்கு வருமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது இப்பொழுது ஹஜ்ஜி பெருநாளை முன்னிட்டு முஸ்லிம் மக்மன் தூதுக்கோஷ்டியொன்று வர்த்தக மந்திரி திரு. ஸி. சுந்தரலிங்கத்தைப் பேட்டி கண்டு சனிக்கிழமை தங்களது பெருநாள் வருவதாகவும் அதற்கு முன் ஜவுளிக் கூப்பன்கள் ஐந்தாவது பகுதியை செல்லுபடியாக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர். இதன் பயனாக ஐந்தாவது பகுதி ஜவுளிக் கூப்பன்கள் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளன. மொத்தமாக இப்பொழுது இலங்கையில் (ஐந்தாவது பகுதி ஜவுளிக் கூப்பன்கள் 210 லக்ஷம், முன் அமுலுக்கு வந்து இன்னும் பாவியாது இருப்பவை சுமார் 170 லக்ஷம். பள்ளி மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட விசேஷ ஜவுளிக் கூப்பன்கள் 10 லக்ஷம்) 390 லக்ஷம் ஜவுளிக் கூப்பன் பாயின்டுகள் உபயோகிக்கக் கூடியனவாக இருக்கின்றனவென்றும் இவற்றுக்குப் போதிய ஜவுளி இவ்வருடம் முடியும் வரை இலங்கையில் கிடைக்குமென்றும் கூறப்படுகிறது.

பாராளுமன்றத்தில் மூன்று பாஷைகள்

தமிழ், சிங்களம், ஆங்கிலத்தில் பேசலாம்

அரசாங்க ஊழியர் தொழிற் சங்க உரிமைபற்றி 8 மணி நேரம் மந்திரிகள் கூடிப் பேசினர்

["சுதந்திரன்" அரசியல் நிருபர்]

கொழும்பு, அக். 23

பிரதிநிதிகள் சபை, செனட் சபை ஆகிய இரு சபைகளினதும் தலைவர்களின் (ஸபீகர்கள்) உத்தரவைப் பெற்று அங்கத்தவர்கள் சிங்களத்திலும் தமிழிலும் தங்கள் பேச்சுக்களை நடத்திகொள்ள இப்பொழுது வசதி யளிக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் பாராளுமன்றப் பொது மக்கள் சபையின் இரண்டாவது உதவி லிகிதராகிய திரு. ஈ. ஏ. வெலோஸ், இலங்கைப் பிரதிநிதிகள் சபை, செனட் சபையாகிய இரு சபைகளிலும் அங்கத்தவர்கள் விரும்பினால் தங்கள் பேச்சுக்களை ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் அல்லது தமிழில் நடத்த அவர் தயாரித்த நிரந்தரச் சட்டங்களில் இடமளித்திருந்தார். கவர்னர் இச்சட்டத்திற்கு அங்கீகாரம் கொடுத்திருப்பதாக அறியப்படுகிறது.

புதன்கிழமை நடந்த எட்டு மணிநேர மந்திரி சபைக் கூட்டத்தில் அரசாங்க சேவையாளர்களுக்கு தொழிற் சங்க உரிமை வழங்குவது சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டதாகத தெரிகிறது.

மந்திரி சபையினர் அரசாங்க சேவையாளருக்கு அனுதாப வேலை நிறுத்தம் செய்வது உட்பட்ட தொழிற் சங்க உரிமைகளை வழங்கத் தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

மந்திரி சபையில் இதுசம்பந்தமாகப் பிளவுபட்ட அபிப்பிராயம் நிலவியதாகக் கூறப்படுகிறது. மந்திரிகளில் பெரும்பான்மையானோர் பிரிட்டனில் அரசாங்க சேவையாளர் அனுபவிக்கும் தொழிற் சங்க உரிமையை இங்குள்ளோர்க்கும் வழங்குவதில் குற்றமில்லை என்று கூறியுள்ளார்களாம்.

திரு டி. எஸ் சேனநாயக்கா இது சம்பந்தமாக இன்று அல்லது நாளைக்கு ஒரு அறிக்கை வெளியிடுவாரெனத் தெரிகிறது.

சென்ற புதன்கிழமை இரவு செனட சபைக்கு பதினொரு அங்கத்தவர்கள் கவர்னரால் நியமிக்கப்பட்டுள்ளனர். இன்னும் நால்வர் நியமிக்கப்படவருக்கின்றனர்.

(1) கர்னல் டி. ஒய். ரைட், (2) சர். ஜோன் ராபர்ட் (3) சர் ஜெருட் விஜயக்கூன் (4) திரு. யோவேல் போல் ஆகிய நால்வரும் கவர்னரால் செனட்டர்களாக நியமிக்கப்படக்கூடுமென்று நம்பத்தகுந்த அரசியல வட்டாரங்களில் அறியக் கிடைத்திருக்கிறது.

இந்திய அரசியல் நிர்ணய சபை

அரசியல் தயாரிப்பு கமிட்டிக் கூட்டம்

அக்டோபர் 27-ம் தேதி ஆரம்பமாகும்

புதுடில்லி, அக். 22

இந்திய அரசியலை தயாரிப்பதற்காக அரசியல் நிர்ணய சபையால் நியமிக்கப்பட்ட கமிட்டிக் கூட்டம் அக்டோபர் 27-ம் தேதி ஆரம்பமாகும். அரசியல் ஆலோசகர் தயாரித்திருக்கும் நகல் அரசியலை இந்த கமிட்டியினர், பரிசீலனை செய்வார்கள் டாக்டர் பி. ஆர். அம்பேக்கர் இந்தக் கமிட்டியின் தலைவர். ஸ்ரீ. என். கோபாலசுவாமி ஐயங்கார், சர். பி. எல். மித்தர். ஸ்ரீமான்கள் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், கே. எம். முன்ஷி, சையத் மகமத் சாதுல்லா, டி, பி. கைத்தான் ஆகியோர் இந்தக் கமிட்டியின் மெம்பர்கள்.

எல்லை காந்திக்கு எல்லை பிரதமர் மிரட்டல்

கலவரத்தை கிளப்பிவிட பார்க்கிறாராம்!

பெஷாவர், அக். 21

பாக்கிஸதான் அரசாங்கத்திற்கு பாதகத்தை விளைவிக்கும் காரியங்களை பகிரங்கமாகவோ அல்லது ரகசியமாகவோ சிலர் செய்து வருவதை இந்த சர்க்கார் சகித்துக்கொண்டிருக்கப் போவதில்லை.

கழனி நதியில் வெள்ளம் அதிகரிப்பு

கொழும்பு, அக். 24

இப்பொழுது வங்காளக்குடாப்பகுதியில் இருக்கும்கால நிலையின்படி இலங்கையிலும் மழை தொடர்ந்திருக்குமென்று கூறப்படுகிறது. கொழும்புக்குக் கிடைத்துள்ள செய்திகளின்படி இலங்கைமுழுவதிலும்மழை பெய்துள்ளது என்று தெரிய வருகிறது. கழனி நதிப்பகுதியிலும் அதிக மழை காரணமாக கழனி நதி வெள்ளம் நாலேகால் அடிக்கு மேல் கூடிவிட்டது. ஹன்வெல்லப் பகுதியில் நேற்று 33 அடி 8 அங்குலத்துக்கு வெள்ளம் பெருகியுள்ளது.

மகாவலி கங்கை நிலை

மகாவலி கங்கையில வெள்ளம் செவ்வாய்க்கிழமை 12 அடியாக இருந்தது. (பேராதனை பகுதியில்) நேற்று முன்தினம காலை வெள்ளம் 5 அடியாக குறைந்திருந்தது. மீண்டும் நேற்று மாலை வெள்ளம் 8 அடிக்கு உயர்ந்துவிட்டது.

கடுகன்னாவை நிலச்சரிவைத் தவிர வேறு இடங்களில் சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக தகவல் கிடைக்கவில்லை.

நீர்கொழும்பு பகுதியில்உள்ள உச்சுக்கால்வாயில் ஜலம்நிரம்பி ல இடங்களில் ஜலம் வெளியேபாய்வதாக கூறப்படுகிறது.

விவசாய இலாகா டைரக்டர் பதவி ஏற்றார்

கண்டி, அக். 23

இலங்கையின் விவசாய இலாகா புதிய டைரக்டர் திரு. டி. ரிண்ட் திங்கட்கிழமைபேராதெனையில் பதவி ஏற்றார். குண்டசாலையில் பெண்கள் விவசாயக் கல்லூரிக்கு நடக்கும் கட்டிட வேலைகளைச் செவ்வாய்க்கிழமை சுற்றிப்பார்த்தார்.

மூன்று தினங்கள் இடைவிடா மழை

அச்சுவேலியில் வெள்ளக்காடு

கிராம வாசிகளின் கஷ்டம்

[நமது சொந்த நிருபர்]

அச்சுவேலி, அக். 22

யாழ்ப்பாணத்தில் சென்ற மூன்று தினங்கட்கு முன் தொடங்கிய மழை இது எழுதும் நேரம் வரை விடாது பெய்துகொண்டே யிருக்கிறது. அச்சுவேலியில் ஒரே வெள்ளக் காடாகவே காட்சியளிக்கின்றது. தொடர்ந்து மழை பெய்துகொண்டிருப்பதன் காரணமாய் பாடசாலைகட்குப் பிள்ளைகள் போக முடியாதிருக்கின்றனர். பாடசாலைகளெல்லாம் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

வயல் வெளிகளில் வெள்ளம் நெற்பயிர்களை மூடி நிற்கிறது. இடையிடையே சில புல் நுனிகள் மட்டும் தெரிகின்றன. மிதமிஞ்சிய வெள்ளம் காரணமாய் நெற்பயிர்கள் அழுகிவிடுமென விவசாயிகள் அஞ்சுகின்றனர். பள்ள நிலங்களில் உள்ள குடிசைகளிலெல்லாம் வெள்ளம் புகுந்துவிட்டது காரணமாய் அநேக குடும்பங்கள் தங்குவதற்கு இடமின்றித் தவிக்கின்றனர். தங்கள் உணவுப் பொருட்களைச் சென்று வேண்டவோ மற்றும் அத்தியாவசியமான வேலைகளைக் கவனிக்கவோ இயலாது அடைபட்டுக்கிடக்கின்றனர்.

இக்கிராமத்துச் ஜனங்கள் தம் உணவுத் தேவைக்காய் வேண்டிய அளவு மரவள்ளி பயிர் செய்திருந்தனர். எதிர்பாராத அளவில் மழை பெய்தது காரணமாய் மரவள்ளி தோட்டங்களில் சென்ற மூன்று நாளாய் வெள்ளம் அடைபட்டுக் கிடக்கிறது. இதனால் கிழங்குகள் அழுகி துர்நாற்றம் வீசத் தொடங்கிவிட்டன சாதாரணமாய் 50 அல்லது 60 சதம் வரை விற்ற 1 மரவள்ளி மரம் இன்று 4 அல்லது 5 சதம் வரை விற்கிறது சந்தைகள் எல்லாம் மரவள்ளிக் கிழங்குகளாகவே தேங்கிக் கிடக்கின்றன. அவை உபயோகிக்க முடியாத அளவுகெட்டுப்போய் விட்டதால் தேடுவாரற்றுக் கிடக்கின்றன. மற்றும் கத்தரி மிளகாய் கன்றுகள் எல்லாம் வெய்யிலைக் கண்டதும் துஞ்சி வாடிப்போம் என கிருஷிகர்கள் அஞ்சுகின்றனர். காற்றடியாமல் விட்டது அதிர்ஷ்ட வசமேயென விவசாயிகள் மகிழ்ச்சியுறுகின்றனர். காற்று வீசியிருக்குமாயின் வாழை மரங்களெல்லாம் வேரோடு புரண்டிருக்கும். மற்றும் ஆடு மாடுகட்கும் அமோகமான சேதம் ஏற்பட்டிருக்கக் கூடும். கால் நடைகள் தோட்டங்களிற் கட்டிக்கொள்ள முடியாததால் ரோட்டின் இரு மருங்கிலும் வரிசை வரிசையாய்க் கட்டப்பட்டிருக்கின்றன.

இன்று காலை கள்ளிறக்குமொருவர் மரத்தில் ஏறுகையில் சறுக்குண்டு கீழே விழுந்துவிட்டார். பலமான காயம் ஏற்பட்டுள்ளது. உடனே ஆஸபத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

நேற்று மாலை தோட்டத்தில் நின்ற மாடுகளைக் காப்பாற்றச் சென்ற ஒருவர் சேற்றில் அகப்பட்டு கால்கள் இரண்டும்அரையளவு நிலத்திற் புதையுண்டார். இவரது கூக்குரலைக் கேட்ட சிலர் அவ்விடம் சென்று புதையுண்டவரைக் காப்பாற்றினர்.

இன்று மத்தியானமளவில் வெளிப்புஉண்டாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் தொடர்ந்து மழை பெய்யுமாயின் சென்ற சில வருடங்கட்கு முன் உண்டானது போன்ற பெரு வெள்ளச் சேதம் உண்டாகுமோவென அஞ்சப்படுகிறது.

12-வது செனட் அங்கத்தினர் நியமனம்

கொழும்பு. அக் 23

இலங்கை அரசியல் சட்டம் 19-வது பிரிவின்படி கவர்னர் இன்று ஸர். எபிரஹாம் ஜெருட் விஜயக்கோன் அவர்களை செனட் சபைக்கு அங்கத்தவராக நியமித்திருக்கிறார் என இன்று மாலையில் வெளிவந்த கவர்னர் காரியாலய அறிக்கை ஒன்று கூறுகிறது.

இளந் தமிழர்களே! விழிப்படையுங்கள்!!

உங்கள் ஆக்கம் கருதி

'இளைஞன்'

வாரந் தோறும் வெளிவருகின்றான்!

முதல் இதழ் 27-10-47

தனிப்பிரதி 10 சதம். வருட சந்தா ரூ. 5-00.

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் வேண்டும்.

இளைஞன் பிரசுராலயம்,
நிர். 2, கிரான்ட்பாஸ் வீதி,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, தட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஹூ ஐப்பசி மீ 7 உ
வெள்ளிக்கிழமை

ஒப்பந்தப் பேச்சு

பிரிட்டிஷ் மன்னர் பாராளுமன்றத்தில் செய்த பிரசங்கத்தில் இலங்கை அரசியலையிட்டுக் குறிப்பிட்டுள்ளார். "இப்பொழுது நடைபெறும் பேச்சுவார்த்தைகள் இலங்கைக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாட்டந்தஸ்துக்குட்பட்ட பொறுப்பாட்சியை வழங்க வசதியளிப்பதான சட்டமொன்று உங்கள் முன்பு சமர்ப்பிக்கப்படும்" என்று கூறியுள்ளார். இப்பேச்சு டொமினியன் அந்தஸ்தைப் பெற்றுக்கொடுப்பதாகத் தமுக்கடிக்கும் திரு. சேனநாயக்காவுக்கும் அவர் போன்ற அரசியல் அரிச்சுவடி தெரியாத பேர்வழிகளுக்கும் கண்ணைத் திறக்குமென்று நம்புகிறோம். பரமார்த்த குருவுக்கு நல்ல குதிரை ஒன்று வாங்கப் புறப்பட்டான் அவர் சிஷ்யனாகிய மட்டி. குதிரைகள் மேய்ந்து கொண்டு நின்ற தோட்டத்திலிருந்த பூசணிக்காயைக் குதிரை முட்டையென வாங்கினான். இப் பூசணிக்காயைத் தலையில் வைத்துக்கொண்டு குதிரையில் குரு சவாரி செய்வதாக எண்ணினான். குதிரை முட்டை கீழே விழுந்தது. விழுந்தது பூசணிக்காயல்லவா? அது உடைந்தது. இச் சந்தடியில் அருகில் பற்றைக்குள் இருந்த முயல் வேகமாக ஓடியது. அப்பொழுதும் மட்டி, குதிரைக் குட்டி ஓடுவதாக நினைத்து விட்டுக் கலைத்தானும். இது நாம் பள்ளிக்கூடத்தில் படித்த கதை. ஆனால் இது அத்தனையும் திரு. சேனநாயக்காவின் டொமினியன் அந்தஸ்துக்குப் பொருந்தும். முன்பு குடியேற்ற நாட்டு மந்திரி திரு. கிரீச் ஜோன்ஸ் பாராளுமன்றத்தில் ஒரு அங்கத்தவருக்குப் பதிலளிக்கையில், டொமினியன் அந்தஸ்தும், சாம்ராஜ்ய நாட்டந்தஸ்துக்குட்பட்ட பொறுப்பாட்சியும் ஒன்றுதான், அதில் வித்தியாசம் ஒன்றுமேயில்லை என்று கூறினார். ஆனால் பிரிட்டிஷ் மன்னர் நமக்கு வழங்கப்படவிருப்பது டொமினியன் அந்தஸ்தாயிருந்தால் ஏனோ அப்படிக் கூறவில்லை? பர்மாவைப் பற்றி அதே பிரசங்கத்தில் "பர்மாவின் வருங்கால நிர்வாகம்பற்றி பர்மியரின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே சுதந்திரத்துடன் முடிவு செய்யுமாறு வசதி செய்ய ஒரு மசோதா சமர்ப்பிக்கப்படும்" என்று மன்னர் குறிப்பிட்டுள்ளார். இப் பேச்சால் பர்மிய பிரதிநிதிகள் சுதந்திரமாகச் செய்யும் முடிவுகளின்படி, பர்மா அரசியல் தயாரிக்கப்படும் என்பது நிதர்சனமாகின்றதல்லவா? பழம் பெருச்சாளிகளான வெள்ளையர்கள் இலங்கை மக்கள் மீதுள்ள அன்பால் இங்கு தங்கியிருக்கவில்லை. வயிறு பிழைப்பதற்காகவே இங்கு தங்கியிருக்கிறார்கள். வயிற்றை வளர்க்கும் வேலையிலிருந்து அவர்கள் தாமாக விலகுவார்களென திரு. சேனநாயக்கா நினைப்பது வெறுங் கனவுதான். அவர்கள் தாமாக விலகிக்கொள்ளுவதற்கு இந்தியாவில், பர்மாவில் எத்தனை தியாகங்கள் செய்யவேண்டியிருந்ததை திரு. சேனநாயக்கா அறியாதது துக்கமே!

மன்னரின் பிரசங்கம், திரு சேனநாயக்காவின் குட்டு ஒன்றையும்வெளிப்படுத்தியுள்ளது. இலங்கையின் புதிய பாராளுமன்றத்தால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளுடனேயே பொறுப்பாட்சி சம்பந்தமான ஒப்பந்த பேச்சு வார்த்தைகளை பிரிட்டன் நடக்கும் என்று முன்பு அறிவிக்கப் பட்டிருந்தது. ஆனால் 'இப்பொழுது' பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக மன்னர் பிரசங்கம் தெளிவாகக் கூறுகிறது. பிரிட்டிஷ் மன்னர் பொய் சொல்லமாட்டார். ஆகவே ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் யாருடன் நடாத்தப் படுகின்றதென்று ஒவ்வொரு இலங்கை மகனும் கேட்கின்றான். யார் இலங்கைப்பிரதிநிதிகள்? இதை பிரிட்டிஷ் அரசாங்கம் உடனே கூறவேண்டும்.

சென்ற சில காலமாக திரு. சேனநாயக்கா, இலங்கை அரசியல் சம்பந்தமாக சீமை சாமியுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகள் யாவும் இரகசியத்திலேயே நடைபெறுகின்றன. இலங்கையிலுள்ள வகுப்புத்துவேஷத்திற்கு இதுவே முதற் காரணம். இங்கு, சிங்களவர், தமிழர், சோனகர், பறங்கியர் முதலானோர் வாழ்கிறார்கள். திரு. சேனநாயக்கா சிங்களமக்களாகிய ஒரு சமூகத்தினரின் பிரதிநிதி-அதுவும் எல்லாச்சிங்களமக்களின் பிரதிநிதி என்றும் கூறமுடியாது. சென்ற பொதுத் தேர்தலில் அவருக்கு ஒரு அளவில் தோல்வியே கிடைத்துள்ளது என்று கூறவேண்டியிருக்கிறது. இவருடன் நடத்தும் எந்தப் பேச்சு வார்த்தைகளையும் இலங்கை மக்கள் ஏற்க முடியாது சிறுபான்மைச் சமூகத்தினரின் பிரதிநிதிகளும் கொண்டதான ஒரு பிரதிநிதிச் சபையுடனேயே பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கையின் எதிர்கால அரசியல் சம்பந்தமான ஒப்பந்தங்களை ஏற்படுத்த வேண்டும் என வற்புறுத்துகிறோம். ஏதோ இருபத்துமூன்று பேருக்கு பதவிகள் கொடுத்து ஒரு அரசாங்கத்தை திரு. சேனநாயக்கா அமைத்துள்ளார். இரண்டு மூன்று தமிழருக்கும் மூண்டாசு கட்டித்தானிருக்கிறார். இவரின் அரசாங்கம் நிரந்தரமானதென்றோ, மந்திரிசபையிலுள்ள தமிழ்பிரதிநிதிகள் உண்மைத் தமிழ்மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பவர்களாகவோ நாம் கூறமுடியாது. இந்த நிலைமையில் இவர்களுடன் பிரிட்டிஷ் அரசாங்கம் செய்யும் ஒப்பந்தங்கள் எவையும் இலங்கை மக்களுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தமாகா.

கிழக்கிலும் அமெரிக்காவின் கண்

ஆசியாவுக்கும் ஒரு மார்ஷல் திட்டமா?

பொஸ்டன், அக். 21

ஐரோப்பாவுக்கு பொருளாதார 'உதவி'த் திட்டம் ஒன்று மார்ஷல் திட்டம் என்ற பெயரில் அமெரிக்கா ஏற்படுத்தியதல்லவா? அதேபோல ஆசியா, தென் அமெரிக்கா முதலிய இடங்களுக்கும் அமெரிக்க பொருளாதார உதவி விஸ்தரிக்கப்படலாம் என அமெரிக்க அரசாங்க உதவிக் காரியதரிசி திரு. நோர்பன் ஆமன் இங்கு செய்த ஒரு பிரசங்கத்தில்குறிப்பாக உணர்த்தினார்.

ஜவுளி மோசடி

இளைஞனுக்கு நன்னடத்தைப் பிணை

கொழும்பு, அக். 24

கொழும்பு மெஸர்ஸ் ஹிர்த்த ராமணிக்குச் சொந்தமான 20 டசன் பட்டின் வர்ட்டுகளை (ரூ 2017-41 மதிப்புள்ளவை) கள்ள ரசீதைக் கொடுத்து துறைமுகத்தில் உள்ள திரு ஏ. கந்தசாமி என்பவரை ஏமாற்றி பெற்றதாக குற்றம் சாட்டப்பட்ட டபிள்யூ. ஏ. ஸி. எம். அபயசேகரா (22 வயது) என்பவரை மூன்று வருடங்களுக்கு ரூ 500 நன்னடத்தைப் பிணையில் போகுமாறு கொழும்பு கோட்டை மாஜிஸ்டிரேட் தீர்ப்பளித்தார்.

கலவர வழக்கில் 7 பேர்

ஜில்லாக் கோர்ட்டில் விசாரணை நடக்கும்

நாவலப்பிட்டி, அக். 23

நாவலப்பிட்டியில் சட்டவிரோதமாக கூட்டம்கூடி கலவரம் விளைத்து, களவு செய்ததுடன் திரு. டி. டி. அபயகுணவர்த்தனா என்பவரைத்தாக்கிப் பயமுறுத்தியதாகவும் ஏழுபேர்கள் மீது குற்றம சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கு நாவலப்பிட்டி மாஜிஸ்டிரேட்டின் முன் விசாரிக்கப்பட்டது. எதிரிகள் குற்றவாளிகளல்ல என்று கூறினர். நீதிபதி இவ்வழக்கை ஜில்லாக் கோர்ட்டு விசாரணைக்கு ஒத்திவைத்தார்.

தனிக்காட்டு ராஜாக்கள் என்று

கனவு காணுதீர்!

சமஸ்தான மன்னர்களுக்கு காந்திஜி எச்சரிக்கை

பண்டித நேருவையும் மகாத்மாவையும் பாக்கிஸ்தான் உணவு மந்திரி பாராட்டுகிறார்

இந்திய அந்நிய நாட்டுக்கொள்கைபற்றி திரு. கிருஷ்ண மேனன்

புதுடில்லி, அக். 22

இன்றைய பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பின்வருமாறு தெரிவித்தார்:- இந்தியாவிலுள்ள சமஸ்தான மன்னர்கள் தங்கள் இஷ்டம்போல மக்களை ஆளக்கூடிய தனிக்காட்டு ராஜாக்கள் என்று கனவு காண்பது பெருந் தவறாகும். அவர்கள் தங்கள் குடிகளின் சம்மதத்தின் பேரிலும் அவர்கள் நல்லெண்ணத்தின் பேரிலும்தான் தாங்கள் மன்னர்களாக இருக்க முடியுமென்பதை உணர வேண்டும். இந்திய யூனியனில் சேர்ந்த பல சமஸ்தான மன்னர்கள் தாங்கள் இந்திய யூனியன் சர்க்காரின் அதிகாரத்தின் கீழ் இருப்பதான நினைவு அவர்களுக்கு இருப்பதாகத தெரியவில்லை பிரிட்டிஷ் ஆட்சியில் தான் கடடுபபட்டிருந்தோம் என்றும் இப்பொழுதுதங்களிஷ்டம் போல யதேச்சையாக காரியங்களைச் செய்யலாமென்றும் கருதி குடிஜனங்களைக் கஷ்டப்படுத்தியும் அவர்களுடைய அபிப்பிராயத்தை அவமதித்தும் வருகிறார்கள்.

பாக்கிஸ்தான் மந்திரி பாராட்டு

ராவல்பிண்டி, அக் 22

பாக்கிஸ்தான் உணவு மந்திரி கன்னுபர் அலிகான் இங்கு பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- பாக்கிஸ்தானில் சுதந்திரமென்பது எல்லோருக்கும் பொதுவானது. அரசாங்கத்தில் முஸலிம்களைப்போல முஸலிம் அல்லாத பிரஜைகளுக்கும் சமமான சகல உரிமைகளுமுண்டு.

இந்திய யூனியனில் பண்டித நேருவும் மகாத்மா காந்தியும் வகுப்பு சமரசத்திற்கும் அமைதிகரும் அற்புதமாகப் பாடுபடுகிறார்கள். அவர்களின்றேல் இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் கதி அதோகதியாகப் போயிருக்கும். கலகப் பிரதேசததிலுள்ள முஸலிம்களின் உயிர்களைப் பாதுகாக்க பண்டிதநேருவும் மகாத்மா காந்தியும் செய்துவரும் உண்மையான அரிய சேவைகளால் நாட்டின் அமைதிகருமட்டுமல்ல, உலக சமாதானத்திற்கே அவர்கள் பெரும் பணியாற்றுபவர்களாக விளங்குகிறார்கள்.

இந்திய முஸ்லிம்கள் உணர்வார்களா?

நாகபுரி, அக் 22

இந்திய அரசியல் நிர்ணய சபை அங்கத்தினரும் அகில இந்திய முஸலிம் லீக் கவுன்ஸில் மெம்பரும் மத்திமமாகாண சட்டசபை அங்கத்தினருமான ஹாஜி செய்யதுகாரிமுதீன் பின்வருமாறு தெரிவித்தார்.- இந்திய டொமினியனில் வசிக்கும் ஒவ்வொரு முஸலிமுக்கும் இப்பொழுது இந்திய டொமினியன் எல்லைகுட்பட்ட பிரதேசமே தாய் நாடாகும். இந்திய முஸலிம்களுக்கு பாக்கிஸதான் ஓர் அந்நிய நாடே. மத்திய முஸ்லிம் லீக்கிற்கும் இப்பொழுது இந்திய மாகாணங்களிலுள்ள முஸலிம் லீக்குகளுக்கும் சம்பந்தமே கிடையாது. ஆகஸ்ட் 15-ம் தேதிக்குப்பின் அந்த சம்பந்தம் அறுபட்டுப்போய்விட்டது. ஆகவே இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் இனி தனிப்படவேறு ஸ்தாபனமாக அமைத்து வேலை செய்யவேண்டும். ஆதலால் இனி இந்திய முஸலிம்கள் புதிய தலைமையில் தங்கள் நலன்களுக்கு முயற்சிக்க வேண்டுமேயொழிய பாக்கிஸதானின் உதவியை எதிர்பார்த்துக்கொண்டிருப்பது தேசத் துரோகமாகும். இந்திய யூனியனிடம் அவர்கள் விசுவாசமாக இருப்பதுடன் அதன் முன்னேற்றத்திற்கும் அமைதிக்கும் பாதுகாப்புக்குமே பாடுபடவேண்டும். மத்திய மாகாணப் பிரதம மந்திரியின் நிர்வாகம் மிகவும் பாராட்டற்குரியது. மத்திய மாகாணத்தில் வகுப்புத் துவேஷமின்றி திரு. சுக்ளா அரசாங்கத்தை நடத்தி வருவது மிகவும் பாராட்டற்குரியது.

காந்தி, நேரு படத் திறப்பு

லண்டன், அக். 22

பிரபல சைதரீகரான திரு வி. ஆர். ராவ் மகாத்மா காந்தியின் படத்தையும் பண்டித நேருவின் படத்தையும் அற்புதமாக வரைந்திருக்கிறார். அவைகள் இன்று இந்தியா மாளிகையில் திறந்துவைக்கப்பட்டன.

ஸ்ரீமதி விஜயலட்சுமி இந்தியா வருவார்

நியூயார்க், அக், 23

ஐக்கிய தேச அசெம்பிளிக்கு இந்தியாவின் பிரதிநிதிக் கோஷ்டித் தலைவராக வந்திருக்கும் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் மாஸ்கோ திரும்புவதற்கு முன்னதாக புதுடில்லிக்குப் பறந்துசெல்வார். அங்கு அவர் இந்தியா பிரதம மந்திரி பண்டித நேருவையும் மற்ற மந்திரிகளையும் சந்தித்துப் பேசிவிட்டு ஸதானாதிபதி பேலையை ஒப்புக் கொள்ள மாஸ்கோவுக்குச்செல்வார்.

நவம்பர் மாத மத்தியில் தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை ஐக்கிய தேச அசெம்பிளியில் விவாதிக்கப்பட்ட பின் இந்தியாவுக்குப் பயணமாவார். இப்பொழுது அவருடன் இங்கு தங்கியிருக்கும் அவரது புதல்விகளான ரீத்தாவும் சந்திரலேகாவும் மாஸகோவுக்கு கப்பலில் பயணமாவார்கள். மற்றொரு புத்திரி தாரா இப்பொழுது நியூயார்க்கிலிருந்து டில்லி வந்து தனது தாய்மாமனாரான பண்டித நேருவுடன் தங்கியிருக்கிறார்.

தமாஷா வரி செலுத்த தவறினர்

எதிரிக்கு ரூ. 250 அபராதம்

குருநாகல், அக். 23

குருநாகலை அர்பன் சபை எல்லைக்குள் ஒரு நாடகக்தை நடத்தி அதன்மூலம் ரூ. 588-40 சேர்த்தபின் சமூக சேவை நிலையத்துக்கு ரூ. 100 மாத்திரம் கொடுத்ததாகவும் அர்பன்சபையின் தமாஷா வரி செலுத்த தவறிவிட்டதாகவும் அண்ட்ரூ சில்வா என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் குருநாகல் மாஜிஸ்டிரேட் எதிரிக்கு ரூ. 250 அபராதம் விதித்தார்.

இரு ரேஷன் புத்தகங்கள் வைத்திருந்தார்

எதிரிக்கு ரூ. 150 அபராதம்

கொழும்பு, அக். 24

லெயார்ட்ஸபுரோட்வேயைச் சேர்ந்த எம்.எம். மொகைதீன் கண்ணு என்பவர் இரண்டு அரிசி ரேஷன் புத்தகங்கள் வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் எதிரிக்கு ரூ 150 அபராதம் விதித்தார்.

ரயில்வே போலிஸ்மன் களவு முயற்சி

அனுராதபுரம், அக். 23

ஒரு யாழ்ப்பாண இரவு மெயில் ரயிலில் பிரயாணம் செய்த திரு. குமாரசுவாமி என்பவருக்குச் சொந்தமான ஒரு சூட்கேஸையும் ஒரு புத்தகத்தையும் திருட முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்ட அனுராதபுர ரயில்வே போலிஸமன கே. பி. அப்புஹாமி என்பவர் அனுராதபுரம மாஜிஸ்டிரேட் முன் விசாரணை செய்யப்பட்டார். எதிரி குற்றவாளியெனக்காணப்பட்டார் நீதிபதி தண்டனை விதிப்பதை 30-ம் தேதி வரை ஒத்திவைத்தார்.

2000 டன் சீனி

கொழும்பு, அக். 22

இலங்கைக்கு மொம்பாஸாவிலிருந்து வரும் "இஸபபிங்கோ" என்னும் கப்பலில் இலங்கைக்கு 2000 டன் சீனி வருகின்றது.

பிரெஞ்சு மந்திரிகள் ராஜினாமா

பொருளாதார, சமூக, அரசியல் நெருக்கடிகள்

கமியூனிஸ்ட் கட்சிக்கு மூன்றிலொரு பங்கு மக்கள் ஆதரவு

பாரிஸ், அக் 22

இன்று பிரெஞ்சு மந்திரிசபைக் கூட்டத்தில் பிரெஞ்சு மந்திரிகள் ராஜினாமா செய்வதென முடிவு செய்தனர். எல்லா மந்திரிகளும் பிரதம மந்திரி ராமடீரிடம் தங்கள் ராஜினாமாக் கடிதங்களை சமர்ப்பித்தனர். திரு. ராமடீர் புதிய மந்திரிகளை நியமிப்பார். இப்புதிய மந்திரி சபை கொஞ்ச அங்கத்தினர்களைக் கொண்டதாக இருக்கும்.

ராஜினாமா செய்வதற்குமுன் மந்திரி சபைக் கூட்டத்தில், நாட்டில் பொருளாதார, சமூக, அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருபபதால் இரண்டு வாரங்களுக்குமுன்னதாகவே அக்டோபர் 28-ம தேதி பிரெஞ்சு பார்லிமெண்டைக் கூட்டவேண்டுமென்று தீர்மானித்திருந்தனர்.

பிரெஞ்சுமுனிசிபல்தேர்தலில் டிகாலுக்கு ஏற்பட்ட வெற்றியும், தொழில் சங்கத்தார் கோரும் சம்பள உயர்வும், இறக்குமதித்திட்டமுமே இந்த ராஜினாமாவுக்குக் காரணமென்று சொல்லப்படுகிறது.

திரு. ராமடீர் இந்த வருடம் லியோன் பிளமுக்குப் பின் ஜனுவரி 22-ம் தேதி பிரதம மந்தரியானார். இவரது மந்திரி சபையிலுளள 26 மந்திரிகளில் 14 பேர்கள் இடதுசாரிகள்.

150 கோடி டாலர் தங்கம்

சென்ற மூன்று வருடகாலத்தில் பிரான்ஸ் அமெரிக்காவுக்கு 150 கோடி டாலர் பெறுமதியான தங்கத்தை விற்றிருக்கிறது.

டிகால் கட்சி இப்பொழுது முக்கிய கட்சியாக இருப்பதால் அவர் இன்று நாட்டு நிலைபற்றி ஒரு அறிக்கை வெளியிடுவார்.

கமியூனிஸடு அறிக்கை

கமியூனிஸடு கட்சி சீழ்க்கண்ட அறிக்கை விடுத்திருக்கிறது:- பிரான்ஸில் மூன்று பேருக்கொருவர் வீதம் கமியூனிஸடு கட்சியை ஆதரிப்பவர்கள் என்பதை முனிசிபல் தேர்தல் ருசுப்பித்துவிட்டது. இக்கட்சி நாலா புறங்களிலிருந்தும் தாக்கப்பட்டுவந்தும் கட்சிபலம் அதிகரித்தே வருகிறது.

புதிதாக 13 மந்திரிகளே

திரு. ராமடீர் 13 மந்திரிகளடங்கிய புதிய மந்திரிசபை ஜாபிதாவை தலைவர் ஆரியலிடம் சமர்ப்பித்து நாடு அபாயகரமான பொருளாதார நெருக்கடிக் குட்பட்டிருக்கிறதென்று தெரிவித்தார். இப்பதின் மூவரில் அந்நிய நாட்டு மந்திரி பிடால்டும் நிதிமந்திரி வீமனும் பழைய மந்திரி சபையிலிருந்தவர்கள். (ராய்ட்டர்)

பிரிட்டனுக்கு அதிக தேயிலை ஏற்றுமதி

கொழும்பு, அக். 23

இலங்கையிலிருந்து செப்டம்பர் மாதத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தம் 32,783,901 ருத்தல் தேயிலையிலும் பிரிட்டன் ரூ 26,714,389 க்கு 12,782,004 ருத்தல் தேயிலையை வாங்கியுள்ளது கானடா ரூ 9,781,169 கொடுத்து 4,079,985 ருத்தல் தேயிலையையும், நியூஸீலந்து ரூ 4,609,063 க்கு 2,205,293 ருத்தல் தேயிலையும் வாங்கியுள்ளன.

இந்தியாவின் ரஷிய ஸ்தானிகர்

மாஸகோ, அக். 22

இந்தியாவுக்கு ரஷிய ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள திரு கே. வி. நொவிகவ் சமீபத்தில் வியன்னாவில் கலைக்கப்பட்ட ஆஸதிரிய உடன்படிக்கை சம்பந்தமான நான்கு வல்லரசுகள் கமிஷனில சோவியத் பிரதிநிதியாக இருந்து பெரும் சேவையாற்றியவர். இவர் சோவியத் அந்நிய நாட்டு இலாகாவின் அங்கத்தினராக இருந்து பாரிஸ சமாதான மகாநாட்டில் பெரும் பங்கு எடுததுக்கொண்டவர். சென்ற வருடம் ஐக்கிய தேச அசெம்பிளியின் சோவியத் ரஷியா பிரதிநிதிகள் கோடிக்கு காரியதரிசியாக இருந்து வேலை செய்தவர்.

திரு. கிருஷ்ண மேனன்

லண்டன், அக். 22

இந்தியா ஹை கமிஷனர் திரு. வி. கே. கிருஷ்ண மேனன் அதிக அலுவல்கள் இருப்பதை முன்னிட்டு இந்திய கஷ்டநிவாரணக் கமிட்டி காரியதரிசி பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார். அவருக்குப் பதிலாக அந்த வேலையை இந்தியா லீக் கூட்டுக் காரியதரிசி ஜே. எஸ். மாமிக் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இக்கமிட்டி வங்கப் பஞ்சத்தினபோது 5 வருடங்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் பஞ்சத்தாலும் வெள்ளத்தாலும் ஜனங்கள் கஷ்டப்படும்போது நிவாரணம் அளிப்பதற்காக இது ஏற்பட்டது. இதில் லார்டு லிவர்ஹல்மே, லிபரல் கட்சித் தலைவர் திரு கிளெமெண்ட் டேவிஸ, ஸ்ரீமதி எலிஸபெத் காட்பரி, லேடி கரிப்ஸ், ஸர். கிரிப்ஸ் முதலியவர்கள் சம்பந்தப்பட்டவர்கள்.

அடிமையுள்ளவரை அமைதி இல்லை

இன்று திரு வி. கே. கிருஷ்ண மேனன் தேசிய சமாதான சபைக் கூட்டத்தில் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- எனது சொந்த ஹோதாவில் நான் பேசுகிறேன். உலகிலே அடிமை மக்கள் இருக்கும் வரை சமாதானம் இருக்கப் போவதில்லை. இந்தியாவின் அந்நிய நாட்டுக் கொள்கைபற்றி இவ்வளவு சீக்கிரமாகப் பேசுவது முடியாத காரியம். இந்தியாவின் அந்நிய நாட்டுக் கொள்கை இப்பொழுதுதான் உருவாகி வந்து கொண்டிருக்கிறது. ஆனால் உலகெங்குமுள்ள அடிமை மக்கள் சுதந்திரம் பெற வேண்டுமென்பதே இந்தியாவின் கொள்கை. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலுமுள்ள ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்குட்பட்ட அடிமை நாடுகளான குடியேற்ற நாடுகளும் ஐரோப்பிய நாடுகளும் சுதந்திரமடைய வேண்டுமென்பதும் அவ்விதம் உலகெலாம் மக்கள் சுதந்திரமடையாமல தான் பெற்ற சுதந்திரத்தால் பயனிலலையென்பதும் இந்தியாவின் பொதுவாகவுள்ள வெளிநாட்டுக் கொள்கையாகும். உலகில் சமாதானத்தை நிலைநிறுத்துவதே இந்தியா தனது கடமையாகக் கருதுகிறது. கத்தி முனையில் அப்படிப்பட்ட சமாதானததை நிறுவ இந்தியா விரும்பவில்லை. மனித வர்க்கததின் மனச்சாட்சியைத் தட்டிஎழுப்பி மனிதன் பெருங் குணங்களை உலகெங்கும் மணம் கமழும்படி செய்து உலக சமாதானத்தை நிரந்தரமாக நிலைநாட்ட இந்தியா விரும்புகிறது. ஏனைய நாடுகளுடன் மிக்க நேசப்பான்மையுடனும் நல்லுறவோடுமிருக்க இந்தியா விரும்புகிறது. ஆனால் தென்னாப்பிரிக்கா மட்டும் இதற்கு விதி விலக்கு. (ராய்ட்டர்)

தேயிலைக் கம்பெனி மீது மானேஜர் வழக்கு

ரஜா சம்பளம், கப்பற் பிரயாண செலவு கொடுக்க நீதிபதி தீர்ப்பு

கொழும்பு, அக் 24

எதாபோலா தேயிலைக் கம்பெனி (இலங்கை லிமிட்டெட் லண்டன்) யில் ஒப்பந்தத்தின் மேல் மானேஜராக வேலை பெற்ற திரு. ஜி. எஸ். ரோஸ் என்பவர் இக்கம்பெனியின் ஒப்பந்தப்படி தமக்கு ரூ. 3923-61 அக்கம்பெனி கொடுக்கவேண்டுமென்றும் அக் கம்பெனி ஒப்பந்தத்தில் பிரதி நான்கு வருடங்களுக்கு ஒரு முறை முழுச் சம்பளத்துடன் நான்கு மாத ரஜாவும் பிரிட்டனுக்குக் கப்பல் பிரயாணச் செலவுகளும் கொடுப்பதாகவும் தாம் 1934 ஜூன்மாதம் பதவி ஏற்றபின் 1937-ம் ஆண்டில் பிரிட்டன் சென்று வந்ததாகவும் அப்பொழுது தமக்கு நான்கு மாத ரஜா கொடுத்ததுடன் முழுச் சம்பளமும் தமக்கும் மனைவிக்கும் கப்பற் போக்கு வரத்து செலவுகளும் கொடுக்கப்பட்டதாகவும் பின்னர் யுத்தம் காரணமாக 1941-ம் ஆண்டில் தாம் பிரிட்டன் செல்லவில்லையென்றும் 1943-ம் ஆண்டில் தாம் பிரிட்டன் செல்ல விரும்பியதாகவும் கம்பெனியினர் தமக்கு வரவேண்டிய தொகையைக் கொடுக்க மறுத்து குறைவாகக் கொடுக்க முன்வந்தனர் என்றும் திரு. ரோஸ் தெரிவித்தார்.

விசாரணை முடிவில் நீதிபதி திரு. வி. எல். எஸ்டி. கிளேயர் சுவான், அக் கம்பெனி வழக்காளிக்கு ரூ 3811-11ம், மிகுதியாக ரஜா காரணமாக கொடுக்கப்படவேண்டிய பணமும், வழக்குச் செலவுகளும் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பளித்தார்.

மாதம்பிட்டியாவில் கத்திக் குத்து சம்பவம்

குழந்தை காணாமற் போனதால் ஏற்பட்ட கலவரம்

கொழும்பு, அக். 24

மாதம்பிட்டியாவைச் சேர்ந்த டி. டேவிட் பெரேரா என்பவரை நெஞ்சில் கத்தியால் குத்தியதால் திரு டேவிட் மரணமடைந்தாரென்று அதே இடத்தைச் சேர்ந்த அப்துல் ரஹ்மான் செய்யது தாவுத் என்பவர்மீது குற்றம் சாட்டிக் கொண்டு வரப்பட்ட வழக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. பண்டித குணவர்தனா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

செய்யது தாவுத் ஒரு சிங்களப் பெண்ணை மனைவியாக வைத்திருந்தாரென்றும் இடையில் ஏற்பட்ட மனஸதாபங் காரணமாக மனைவி இவரைப் பிரிந்து விட்டதால் இவரது மகள் (4 வயது) இவரடனே இருந்ததாகவும் அக். 20-ம் தேதி வீட்டில் குழந்தையைக் காணாததால் அண்டை வீட்டுக்காரர்களான டேவிட்டையும் அவரது மனைவியையும் இவர் விசாரித்தாரென்றும் அதன் பின் ஏற்பட்ட கலவரத்தினால் தாவுத், டேவிட்டின் நெஞ்சில் கத்தியால் குத்தினாரென்றும் கூறப்பட்டது. நீதிபதி எதிரியை இன்று வரை ரிமாண்டில் வைக்கும்படி கூறி விசாரணையை ஒத்திவைத்தார்.

மட்டக்களப்பில் சைவ மகா சபை

மட்டக்களப்பு, அக். 23

மட்டக்களப்பு விவேகானந்தா மண்டபத்தில் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் மட்டக்களப்பு இந்து சமயக் காரர் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் சைவ மகா சபை ஒன்று அமைக்கப்படுவதன் அத்தியாவசியம்பற்றியும் சபை அமைப்புபற்றியும் தலைவரும் வேறும் பலரும் பேசினார்கள். சபை அமைப்பை வற்புறுத்தி ஒரு தீர்மானம் திரு கே. கணபதிப் பிள்ளையால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின் சபையின் நிர்வாகிகள் தெரியப்பட்டனர். ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தா தலைவராக தெரியப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

அரசாங்க ஊழியர் தொழிற் சங்க உரிமை

சேனட் சபை அங்கத்தினர் தேர்தல்

யூ. என். பிக்களின் அடாத செயல்கள்

(இந்த வார "நிதாஸ்" என்னும் பத்திரிகை எழுதிய வற்றின் தமிழாக்கம்):

பொதுஜனப் பிரதிநிதிகள் சபையின் திறப்பு விழாவன்று, கவர்னர் வாசிக்கும் ஸ்ரீமுகத்தில் சர்க்கார் குமாஸ்தாக்கள் தொழிலாளர்களின்—தொழிற் சங்க உரிமை சம்பந்தமாக சில வார்த்தைகள் அடங்கியிருக்கும் என்று எண்ணப்படுகிறது எனினும், அப்படித்தான் தொழிற் சங்க உரிமை சம்பந்தமாக குறிப்பிட்டிருந்தாலும்கூட அவற்றை டி. என். பி. அரசாங்கம் நிறைவேற்றிவைக்குமென்று எதிர்பார்ப்பது ஏமாற்றமேயாகும்.

சர்க்கார் ஊழியர்களுக்கு தொழிற் சங்க உரிமை அளிப்பதானது, சேனாநாயக்கா கம்பனி லிமிடெட் போன்று, நாசகரமான நடவடிக்கையல்ல; அது உழைப்பவர்களின் சிறுவெற்றியென்பதாவதுடன், அவர்களின் பொது வாழ்க்கையின் க்ஷேமத்திற்கு அனுகூலமாய் இருக்கும் என்பதுதான் சரியான அபிப்பிராயம். பல வருடங்களாக போராடியதன் பலனாக, முதலாளித்துவ அரசியல் அமுல் நடக்கும் ஐரோப்பிய நாடுகளிலும் கூட சர்க்கார் ஊழியர்கள் தொழிற் சங்க உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். காலப் போக்கை அநுசரித்து, காலதேச வர்த்தமானத்தையொட்டி இலங்கை சர்க்கார் ஊழியர்களுக்கும் தொழிற் சங்க உரிமையை நல்குவதில் ஆபத்தொன்றும் ஏற்பட்டு விடாது.

இந்நிலைமையை காலப் போக்கை-அனுசரித்துதான், சென்ற ஜூன் மாதம் சர்க்கார் ஊழியர்கள் தமது உரிமைப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள் அவர்கள் பட்டம் பதவிகளைக் கேட்டுவிட வில்லை; நியாயமான ஜனநாயக ரீதியான உரிமைகளைத்தான் கேட்டார்கள். அதற்கு, தேச மக்களின் பொது நன்மைக்காக உழைக்கிறதாகச் சொல்லிக் கொண்ட யூ. என். பி. அரசாங்கம் குண்டாந்தடியையும் துப்பாக்கியையும் எடுத்தது. சூழ்ச்சிகளினாலும் பொய்ப் பிரசாரங்களினாலும் சர்க்கார் ஊழியர்களின் பொது வேலை நிறுத்தம் தற்காலிகமாக நிறுத்த வேண்டியிருந்தது.

இச்சமயத்திலும் அரசாங்கம் ஏதோவெல்லாம் உறுதிமொழிகளைக் கூறியது. அந்த உறுதிமொழிகளின் லட்சணம்என்ன வாயிருக்கிறதென்பது இரகசியமல்ல. யுக்தானுசாரமாக உரிமைகளை நல்கும் கெட்டகுணம் யூ. என். பி. அரசாங்கத்திடம் கிடையாது. எனவே தொடர்ந்து போராடித்தான் உரிமையைப் பெற வேண்டியிருக்கிறது.

தொழிற்சங்க உரிமையின் அத்தியாவசியத்தை தேச மக்கள் தற்போது நன்குணர்ந்து, கண்விழித்து விட்டார்கள் இரங்கிக் கொடுப்பதை பெற்றுக்கொள்வதற்கு அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் முதுகெலும்பற்றவர்கள் அரசாங்க ஊழியத்தில் இல்லையென்பதை அரசாங்கக் கட்சி கண்டிப்பாய் அறியவேண்டியது அவசியம். இப்படியாயினும்தொழிற்சங்கஉரிமைகளுள்ளிட்டு இடதுசாரிகளுக்காக எதிர்க்கட்சியினர் பார்லிமெண்டில் போராடுகிறார்கள்; வெளியேயும் கிளர்ச்சி செய்வார்கள்

சேனாநாயக்கா கம்பெனியும் சும்மா இருக்காது. வழக்கம் போன்று தம்மாலியன்ற எதிர்ப்புகளையும் தடைகளையும்செய்வார்கள்.

சேனட் சபையால் நன்மை ஏற்படாது

பொதுஜனப்பிரதிநிதிகளால் 15 சேனட்டர்கள் தெரிவுசெய்யப்பட்டு விட்டார்கள். இவர்களை சற்று நிதானமாக யோசித்துப் பார்த்தால் என்ன லட்சணத்தில்சேனட்சபை உயர்ந்த கடமையைச் செய்யப்போகிறார்களென்பது தெட்டத் தெளிவாகிறது. மற்றப்படி இந்த 15 சேனட்டர்களில் பொதுமக்களின் செல்வாக்கைப் பெற்றவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள். ஏகாதிபத்திய கோவில் பூசாரிகளும், பல தடவை பொதுமக்களால் திரஸ்கரிக்கப்பட்டவர்களும், ஏழை விவசாயி – தொழிலாளர்களின் எழுச்சியில் சிறிதும் விரும்பாதவர்களும், இலவசக் கல்விக் திட்டத்திற்கு எதிரானவர்களும், அரசாங்கத்தை தமக்குள்ளேயே வைத்துக்கொள்ள விரும்புபவர்களும், அரசியல்-சமூக-பொருளாதார-தொழில் துறைகள் சம்பந்தமாக தேங்காய் இருக்கக் கூட தெரியாதவர்களும் இருக்கிறார்கள்.

இந்நிலைமையில், தொழிற் சங்க உரிமையை சர்க்கார் ஊழியர்களுக்கு கொடுக்கவேண்டும பஸ் போக்குவரத்து இன்ஷுரன்ஸ-பெருந் தோட்டங்கள்-தொழிற்சாலைகள்ஆகியவற்றை தேசீயமயமாக்கப்பட வேண்டுமென்று இடதுசாரிகள் முயற்சியினால் ஒருவாறு பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை, ஏகாதிபத்திய தாசர்களும் உறவினருமுடைய சேனட் சபை நிறைவேற்றாது செய்து விடும்; அல்லது தாமதப்படுத்தி விடுமென்பது நிச்சயம்.

இப்படி பொதுஜனசம்மதத்திற்கு உதைகொடுத்து அடாத்தாக நடந்துகொள்ளக் கூடிய அதிகாரமுடைய சேனட் சபையை நீக்கிவிட பொதுமக்கள் கிளர்ச்சி செய்யவேண்டியது அவசியமாய் இருக்கிறது. அன்றேல், தேச மக்களுக்கு அத்தியாவசியமான எந்த தீர்மானம் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டாலும் எவ்வித பிரயோஜனமும் பொதுமக்களுக்கு உண்டாகமாட்டாது என்பதை பொதுமக்கள் உணர்ந்து, ஆவன செய்ய உடனே ஒன்றுகூடி கிளர்ச்சி செய்யவேண்டும்.

யூ. என். பி.யின் சூழ்ச்சி

அரசியல் சட்டப் பிரமாணப்படி முதல்நாளன்று பார்லிமெண்டுக்குள் சென்ற அங்கத்தவர்கள் தாம் விரும்பிய ஆசனங்களில் அமர்ந்துகொள்ளக்கூடியதாய் இருந்தது. இப்படியானால் சுயேச்சை அங்கத்தவர்கள் தாம் விரும்பியபடி தம் வாக்கைக் கொடுக்க முடியும் இதை முன்கூட்டியே அறிந்துகொண்ட யூ என் பி யினர் செய்ததென்ன? அங்கத்தவர்களின் பெயர்களை வெவ்வேறு தண்டுகளில் எழுதி தாம் விரும்பியபடி ஒவ்வொரு ஆசனங்களில் வைத்துவிட்டார்கள். இதன்படி அங்கத்தவர்கள் தம் பெயருள்ள ஆசனங்களில் அமர்ந்தார்கள். ஆனால், சுயேச்சை அங்கத்தவர்கள் இரண்டு யூ என். பி. களுக்கிடையே மாட்டிக்கொண்டார்கள். இந்த முறையினால் சுயேச்சைகளின் வாக்கையும் யூ. என். பி. கள் இலகுவாக பெற்றுக்கொள்ளலாமலலவா? இந்த உபாயங்களினால்தான் திரு மொலமுரேதலைவர் போட்டியில் வெற்றிபெற்றார் என்பதை சிறிது யோசித்துப் பாருங்கள்.

ஏமாந்த சேனட் அபேட்சகர்கள்

யூ என். பி. கள் எவ்வளவு உதாரமும் உண்மையும் உடையவர்களென்பது தேர்தலில் கடடணமிழந்தபணக்காரரான திரு. டப்ளியூ ஏ. பி சொய்சாவுக்கு அதிகப்படியான வாக்குகளைக்கொடுத்ததும் மாஜி கல்வி மந்திரி திரு கன்னங்கராவுக்கு ஒரு வாக்குதானும் கொடாததிலிருந்து தெரிகிறது. இதைப் பற்றி அன்று சேனட் தேர்தலில் தோல்வியடைந்த அபேட்சகர்கள் பலவாறுகப் பிரலாபப்பட்டார்கள்.

பங்களாக்களில் கூலிக்காரர்களின் திருட்டு

கைது செய்யப்பட்ட அறுவருக்கு ரிமாண்டு

கொழும்பு, அக். 23

கறுவாக் காடு, பம்பலப்பிட்டி பகுதிகளில் உள்ள வீடுகளில் இருந்து பலவகைப் பட்ட பொருள்கள் களவு போவதாக கடந்த மூன்று மாத காலமாக போலிஸாருக்கு தகவல் கிடைத்திருந்தது. இப் பகுதியில் களவுபோன பொருட்கள் சுமார் ரூ. 10,000 மதிப்புள்ளவையென்று கூறப்படுகிறது. சில தகவல்கள் கிடைத்ததன்மேல் இரகசியப் போலிஸ இலாகா ஏ. எஸ். பி. திரு. ஜே டபிள்யூ. எல். அட்டிகலேயும் மற்றும் பல போலிஸாரும் ஒரு மோட்டார்காரின் டிரைவரையும் கிளீனரையும் கைது செய்தனர் என்றும் அதன் பின் அவர்களுடைய வாக்குமூலங்களைக்கொண்டு பொரளை, கும்பனித் தெரு ஆகிய இடங்களில் பல வீடுகளை, போலிஸார் சோதனை செய்து களவு போனதாகக் கூறப்பட்ட பல பொருட்களை (சுமார் ரூ. 4000 மதிப்பு) எடுத்து சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்ததுடன் ஆறு பேர்களைக் கைது செய்துள்ளதாகவும் தெரிகிறது.

இக் களவுகளில் சம்பந்தப்பட்டது ஒரு ஐரோப்பிய சிவில் சர்வீஸ் உத்தியோகஸதரின் வீட்டில் முன் வேலை செய்த மலையாளக் கூலிகாரர் என்றும் பல பங்களாக்களில் வேலை செய்த கூலியாடகளே இக் கொள்ளைக் கோஷ்டியென்றும் தெரிவிக்கப்பட்டது. எதிரிகள் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

சுவர் விழுந்து இருவர் சிக்கினர்

ஒருவர் ஆஸ்பத்திரியில் மரணம்

கந்தானை, அக். 22

கந்தானை போலிஸ ஸடேஷனுக்குச் சமீபத்திலுள்ள ஒரு வீட்டை ஆர். டி. தோமஸ அப்பு, ஹென்ட்ரிக் சில்வா ஆகிய இருவர் இடிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தனர் என்றும், சனிக்கிழமை அவ்வீட்டின் சுவர் இவர்கள் மீது விழுந்ததால் ஒருவர் மரணமடைந்தார் என்றும், மற்றவர் காயமடைந்தாரென்றும் கூறப்படுகிறது.

கந்தானை போலிஸ இன்ஸபெக்டர் இளையதம்பியும் சில கான்ஸடபிள்களும் இருவரையும் ருகமை ஆஸபத்திரிக்கு அப்புறப்படுத்தினர். ஆஸபத்திரியில் தோமஸ் அப்பு மரணமானார்.

நீரில் மூழ்கி இருவர் மரணம்

கழனிகங்கையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முகத்துவாரப் டானியல் வீதியைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் ஸ்நானம் செய்து கொண்டிருந்தனர் என்றும் அவர்களில் 16 வயதான ஈரங்காலா என்னும் சிறுவன் நீரில் மூழ்கி மரணமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

வெள்ளவத்தைக் கால்வாயில் நேற்று முன்தினம் அந்தோனி (வயது 6) என்னும் சிறுவன் மூழ்கி மரணமடைந்ததாகத் தெரிகிறது. நகர மரண விசாரணை அதிகாரி விசாரணை நடத்தி தற்செயலாக நீரில் மூழ்கியதால் மரணமேற்பட்டதாக தீர்ப்பளித்தார்.

ஒரு தோல்வியடைந்த சேனட் அபேட்சகரின் கூற்றிலிருந்து, அவர் சேனட்டர் ஆவதற்காக சுமார் 40,000 ரூபாய் செலவழித்ததாராம். ஒரு வாக்குக்கு 5000 ரூபாய்க்குமேல் செலவாய் இருக்கிறதாம். எனினும் அவருக்கு ஒரு வாக்குத்தானும் கடைக்கவில்லையாம். தனனுடைய பணத்தை மறுபடி திருப்பிக் கொடுக்காவிட்டால், சத்தியக் கடுதாசியில் கைச்சாத்திடடு இடதுசாரி அங்கத்தவர்கள் மூலமாக யூ. என். பி களின் சதிகளை அம்பலத்திற்கு கொண்டுவந்து விடுவதாக பேசியபோது, அவரின் கண்களிலிருந்துகோபக்கனல் எழுந்தது.

ஜெருஸலேமுக்கு மன்னர் அப்துல்லா விஜயம்

பாக்தாத்தில் ஆயிரம் ஷெய்க்குகளின் மகாநாடு

சமரசத்திற்கு ஐக்கிய தேச சப் கமிட்டி நியமனம்

பாக்தாத், அக். 23

ஆயிரம் அராபிய குர்க் ஷெய்க்குகள் இங்கு மகாநாடு கூடி கீழ்க்கண்ட தீர்மானம் செய்தனர்:-பாலஸ்தீனம் பிரிவினை செய்யப்படுமாயின் மதப் போரும் ரத்தக்களரியும் ஏற்படும். பாலஸதீனத்திற்காக யுத்தம் செய்ய ஒவ்வொரு ஷெய்க்கும் தயாராக இருக்கவேண்டும்.

பழைய புரட்சித் தலைவர் தளகர்த்தராம்

பீரட்டிலே நடைபெற்ற அராபிய லீக் மகா நாட்டில் "பாலஸ்தீன விடுதலை அராபிய சேனைக்குப் பிரதம தளகர்த்த" ராக பவுஸி அல் கவான்ஜி நியமிக்கப்பட்டார் என்று நம்பகமான செய்திகள் கூறுகின்றன.

திரு. கவான்ஜி 1936ல் நடைபெற்ற பாலஸ்தீன் அராபியர் எழுச்சியின் தலைவராவார்.

ஈராக்கின் பழைய தற்காப்பு மந்திரியும், பிரதம மந்திரியுமான தஹா அல் கஷீமி இச் சேனையின் இன்ஸபெக்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார் என்றும் டமஸகஸே மேற்படி அராபிய ராணுவத்தின் தலைமைப்பீடமாக விளங்குமென்றும் தெரிகிறது.

ஈராக் பட்டாளத்தினரில் பலரும் பள்ளி மாணவர்களும் தனசரி இவ்வராபிய ராணுவத்தில் சேர்ந்தவண்ணமேயிருக்கின்றனர்

எல்லை கடந்தவர்கள்

ஜெருசலேம், அக். 21

பாலஸ்தீன் வட எல்லையைக் கடந்து விட்ட 12 சிரியர்கள் பாலஸ்தீன் போலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

சிரியா எல்லையைக் கடந்து சென்ற 5 யூத போலிசாரும் இங்ஙனமே சிரியா போலிசாரால் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களை சிரியா அரசாங்கம் விடுதலைசெய்ததன்பேரில் பாலஸ்தீன் அரசாங்கமும் சிரியர் பன்னிருவரையும் விடுதலை செய்து விட்டது.

அராபிய எதிர்ப்பு உலகப் படை?

பாரிஸ், அக். 21

சுதந்திர பாலஸ்தீன் பிரெஞ்சு லீக் இன்று விட்ட அறிக்கையில் பாலஸதீன் அராபியருக்கு எதிராகப் போராட ஒரு சர்வதேச ராணுவத்தில் சேவை செய்ய தொண்டர் பலர் முன் வந்திருப்பதாகத் தெரிவித்துள்ளது.

சப் கமிட்டி

நியூயார்க், அக். 22

பாலஸ்தீன பிரச்னை சம்பந்தமாக யூதர்களுக்கும் அராபியர்களுக்குமிடையே சமரஸம் உண்டுபண்ண ஒரு சப் கமிட்டி ஏற்படுத்தவேண்டுமென சால்வடார் பிரதிநிதி கொண்டுவந்த தீர்மானத்திற்கிணங்க ஐக்கிய தேச பாலஸ்தீன கமிட்டி ஒரு சப் கமிட்டி நியமித்திருக்கிறது

டிரான்ஸ் ஜோர்டான் மன்னர்

ஜெருஸலேம், அக். 2

டிரான்ஸ்ஜோர்டான்மன்னர் அப்துல்லா உமர் மஸ்ஜிதிக்கருகே அடக்கம் செய்யப்பட்டுள்ள தனது தந்தை ஹுஸைன் கல்லறைக்கு மரியாதை செலுத்தும் பொருட்டு இங்கு விஜயம் செய்திருக்கிறார். அவரது பாதுகாப்புக்கு முக்கிய இடங்களில் பிரிட்டிஷ் ஒற்றர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

யூதர்கள் பாலஸ்தீனத்திலிருந்து ஐரோப்பாவுக்கும் அராபியர்கள பாலஸதீனத்திலிருந்து மற்ற அராபிய நாடுகளுக்கும் விமானப் போக்குவரதது நடத்த இரு விமானக் கம்பெனிகளை நிறுவியிருக்கிறார்கள். (ராய்ட்டர்)

கொழும்புச் செய்திகள்:

புதிய அட்டார்னி ஜெனரல்

கொழும்பு, அக். 24

இலங்கையில் பழைய சட்டக் காரியதரிசியான திரு ஏ. ஈ. பி. ரோஸ், புதிய அரசியல் சட்டத்தின்கீழ் அட்டார்னி ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளதாக கவர்னர் காரியாலய அறிக்கையொன்று கூறுகின்றது.

* * *

கடுகன்னாவையில் மண் சரிவு

கொழும்பு கண்டி ரஸ்தாவில் கடுகன்னாவை பகுதியில் பகலா என்னும இடத்தில் (61-வது மைலில்) நேற்று முன்தினம் காலை ஏற்பட்ட மண் சரிவினால் மாவனெல்லப் பகுதி தந்திப் போக்குவரத்துகள துண்டிக்கப்பட்டதுடன் ரஸதாப் போக்குவரத்தும் தடைப்பட்டு விட்டது. இம்மண் சரிவினால் தூக்கியெறியப்பட்ட லொறி ஒன்றின் டிரைவர் பலத்த காயங்களுடன் ஆஸபத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளார், லொறியின் கிளீனர் பியதாஸ என்பவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்தார் என்று கூறப்படுகிறது.

* * *

விகாரமகாதேவி ஜித்தா சேர்ந்தது

கொழும்பிலிருந்து ஹஜ் ஜியாத்திரிகர்களை (16 பேர்களை) ஏற்றிகொண்டு ஜித்தாவுக்கு 17-ம் தேதி புறப்பட்ட இலங்கை விமானம் விகாரமகாதேவி, ததாபோய்ச்சேர்ந்துள்ளதாக கொழும்புக்கு நேற்று முன்தினம் செய்தி கிடைத்துள்ளது.

* * *

தேசீய கீதப் போட்டி

இலங்கைக்கு தேசீய கீதமொன்றைத் தெரிவு செய்துகொள்வதற்கு அகில இலங்கையிலுள்ளவர்களும் கலந்து கொள்ளக்கூடியதாக ஒரு போட்டி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இப்போட்டிக்கு இது வரையில் சுமார் 500 பேர்களுக்குமேல் கலந்து கொள்வதாக அறிவித்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

* * *

துறைமுகத்தில் கப்பல்கள் மோதுண்டன

செவ்வாய்க்கிழமை யன்று மப்புமந்தாரமாக இருந்த காலநிலை காரணமாகவும், கடல்அலை மணிக்கு 38 மைல் வேகத்தில் அடித்தது காரணமாகவும் துறைமுகத்தில் நின்ற 27,268 டன் நிறையுள்ள "ஜியோர்கிக்" என்னும் கப்பல் 6645 டன் நிறையுள்ள "அடரியஸ்" என்னும் கப்பலுடன் மோதும்படி நேரிட்டது.

* * *

தப்பியோடிய கைதி கைது

அத்திடியாவிலே செப்டம்பர் 26-ம் தேதி கலால் இலாகாவின் லொறியை மறித்து அதில் கொண்டு செல்லப்பட்ட பணத்தைக் கொள்ளையடிக்க முயன்றதாக கைது செய்யப்பட்டு, தப்பி யோடிய மூவரில் பியதாஸா என்பவர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார் இவரை 31-ம் தேதி வரை ரிமாண்டில் வைக்கும்படி கொழும்பு தெற்கு மாஜிஸடிரேட் உத்தரவிட்டார்.

இந்தியாவிலிருந்து காய் கறி எண்ணெய் ஏற்றுமதி

கொழும்பு, அக். 23

இந்தியாவிலிருந்து காய்கறி, விதைகளும், காய்கறி எண்ணெய்களும் கட்டுப்பாடின்றி அனுப்பக்கூடிய இடங்களுக்கெலலாம் ஏற்றுமதிசெய்வதை அனுமதிப்பதென இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளது.

பாட்டை சாரிகளுக்கு சுரங்க வழிகள்

வாகன ஜனப் போக்கு வரவுக் கட்டுப்பாட்டில் நவீன முறை

கொழும்பு, அக். 22

கண்ணாஸ்பத்திரிக்கு எதிரில் ஏழு தெருக்கள் ஒன்றுகூடுகின்றன அல்லவா? அங்கு வாகன, ஜனப் போக்கு வரவினால் ஏற்படும் விபத்துகளைத் தவிர்ப்பதற்காக நவீன போக்கு வரவுக் கட்டுப்பாட்டு முறை ஒன்று போலிஸாரால் சமீபகாலமாக 'லிப்டன் சர்க்கிள்' என்ற பெயரில் அமல் நடக்கப்பட்டு வந்தது. ஆனால் அம் முறை முன்னிருந்ததிலும் அதிக சமழப்பத்தை உண்டு பண்ணிவிட்டது என்று முனிசிப்பல் வேலைகள் கமிட்டி கூறுகிறது. இதன் காரணமாக இரண்டு 'ரவுண்ட் எபவுட்'என்னும் கொழும்பின் இதர பாகங்களில் காணப்படும் வாகனக் கட்டுப்பாட்டு முறையே அனுசரிப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அனால் அத்துடன் இலங்கையில் புத்தம் புது அம்சமாக நிலச் சுரங்க வீதிகளை அமைத்து அவை பாட்டை சாரிகளின் உபயோகத்திற்காக விடப்படும். வாகனங்கள் மட்டுமே தெருவால் செல்லும். இத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு வேண்டிய பணத் தேவை எவ்வளவு என்பதை கணக்கிடும்படியும், இது சம்பந்தமாக ஒரு 'ப்ளானைத்' தயாரிக்கும்படியும் முனிசிப்பல் எஞ்சினியர்கள் கோரப்பட்டிருக்கிறார்கள்.

நகரசபைத் தேர்தல்

சமசமாஜிகள் போட்டியிடுகின்றனர்

மொரட்டுவை, அக். 22

மொரட்டுவை அர்சன் சபையின் 12 வார்ட்டுகளுக்கும் அங்கத்தவர் தேர்தலில் லங்கா சமசமாஜிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலர் போட்டியிடப் போகின்றனர் என்று கூறப்படுகிறது. அபேட்சகர்கள் தங்கள் பெயர்களை நியமனம் செய்யது நவம்பர் 4-ம் தேதிக்கு வைக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஓழுங்குகள்பற்றி உள்நாட்டு மந்திரிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

தேசீய சோலைகள் திருத்தியமைப்பு

றுகுணையில் மூன்று புதிய பங்களாக்கள்

கொழும்பு, அக். 23

காட்டிலாகாவின் பொறுப்பில் உள்ள தேசீய சோலைகளை இந்த இலாகா போதியளவு திருத்திவிட்டதாக அறியப்படுகிறது. தென் மாகாணக்கில் றுகுண தேசீய சோலையில் பலத்துபான பத்தோவா, ஜாலா ஆகிய இடங்களில் மூன்று பங்களாக்கள் கட்டப்பட்டுள்ளன இந்த இடங்களில் வேட்டையிலீடுபடுபவர்கள் தங்குவதற்கு சகல சௌகரியங்களும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

பஸ்கம்பெனி காரியாலயத்தில் ரூ. 11,000 திருட்டு

காராவும் அக்கோஷ்டியை சேர்ந்தவராம்

கொழும்பு, அக். 23

ஹைலெவல் வீதி பஸ் கம்பெனி காரியாலயத்திற்குள் மே மாதம் 26-ம் தேதி புகுந்து ரூ. 11,000 கொள்ளையடித்த கோஷ்டியில் காரா என்னும் பிரபல கொள்ளைக்காரனும் ஒருவன் என்பது கொழும்பு தெற்கு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆள் அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டபின் தெரிவிக்கப்பட்டது. காராவுடன் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்ட மற்றும் ஐவரையும் விட வேறும் நான்கு பேர்கள் இவ் வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளனர். மாஜிஸ்டிரேட் விசாரணையை 28-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

விகார லேன் கொலை வழக்கு

கொழும்பு, அக். 23

வெள்ளவத்தை—கல்கிசை தொகுதி தேர்தல் சம்பந்தமாக விகாரை லேனில் நடந்தகொலை வழக்கு மீண்டும் கொழும்பு தெற்கு மாஜிஸ்டிரேட்கோர்ட்டில் விசாரணைக்கு நேற்று முன்தினம் எடுக்கப்பட்டது. இவ்வழக்கில் கே. அடிஸன் ஒபரேரா, எம். வில்ஸன் ஆகியவர்களின் சாட்சியத்தின்பின் மேற்கொண்டு விசாரணை 24-ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பிரியாவிடை

ஊர்காவற்றுறை, அக். 20

தீவுப்பகுதிக் காரியாதிகாரி (டி. ஆர். ஓ.) யாக விருந்து உத்தியோக மாற்றமாக யாழ்ப்பாணம் செல்வதை முன்னிட்டு தீவுப்பகுதி வாசிகள் ஓர் பிரியாவிடை நடத்தினார்கள். சென்ற 18-ம் தேதி சனிக்கிழமை மாலை 5 மணிபளவில் பெருந்திரளான ஜனங்களின் மத்தியில் டி ஆர். ஓ திரு. எச். இ. பிள்ளைநாயகம் அவர்கள் மேளவாத்தியத்துடன் ஊர்காலற்றுறைத் துறைமுகத்திலிருந்து ஊர்வலமாக அழைத்து அர்ச். அந்தோனியார் கல்லூரிக்கு கொண்டுபோகப்பட்டார். அங்கு அவருக்கு மாலை சூட்டப்பட்டது. அதிக, வண. உரிய யேசுதாசன் சுவாமியார் தலைமை வகித்தார். பின்னர் அல்லைப்பிட்டி கிராமச் சங்கத் தலைவர் திரு. கே. கைலாசப்பிள்ளை பண்டிதர் திரு. சு. தியாகராசா ஆசிரியர் திரு. இராசையா, சப்ததீவு வாலிப சங்கக் காரியதரிசி திரு. வி. கார்த்திகேசு, திரு. கந்தையா ஆகியோர் டி. ஆர். ஓ. இவர்களது திறமையையும், குணத்தையும் சேவையையும் மிகவும் வியந்து பாராட்டி புகழ்ந்து கூறினார்கள். பின்னர் டி. ஆர். ஓ அவர்கள் பதில் கூறினார். ஈற்றில் திரு. ரி. சவிரிமுத்து ஆசிரியரால் நன்றி கூறப்பட்டது ஊர்காவற்றுறை வாடி வீட்டில் ஓர் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

கதம்பைக் கயிறு

கிந்தொட்டை கதம்பைக் கயிறுகளும் தும்பால் செய்யப்பட்ட சாமான்களும் நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம் ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

தேடா கயிறு, கம்பை, வடம், ஈக்கில்தடி, தும்புத்தடி, கயிற்றுப்பாய், காப்பற், கால்மிதி இவ்விடம் குறைந்த விலையில் வேண்டிய தினுசுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தோடு திறம் லங்கா பிரான்ட் வினுகரியும், கை பேக்ஸ்களும் கிடைக்கும்.

மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு

விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kalyoom,
Coir Ropes
Manufacturer at Gintota,
No 44, Wolfendahl Street,
Colombo.

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிய வட்டாரத் தொழில் மகாநாடு

இலங்கைத் தூதுக் கோஷ்டிசெலவுக்கு ரூ.13,000

சேனநாயக்கா இந்திய விஜய முஸ்தீபு

கொழும்பு, அக். 24

புதுடில்லியில் நடக்கவிருக்கும் சர்வதேச தொழில் காரியாலயத்தின் ஆசிய வட்டார மகாநாட்டிற்குச் செல்லும் இலங்கைத் தூதுக்கோஷ்டியின் செலவுக்கு ரூபாய் 13,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.புதுடில்லியில் உள்ள இலங்கை சர்க்கார் திரு. எம். டபிள்யூ. எச். டி சில்வா தலைமையில் பிரதிநிதி இன்று காலையே இக் கோஷ்டி இந்தியா புறப்படும் என்று தெரிகிறது.

திரு. சில்வா இந்திய யூனியன் பிரதமர் ஜவஹர்லால் நேருவைக் கண்டு இலங்கை இந்தியப் பிரச்னை சம்பந்தமாக இலங்கைப் பிரதமர் திரு. சேனநாயக்கா தலைமையில் இந்தியா செல்லவிருக்கும் தூதுக் கோஷ்டியின் வரவேற்புக்கு ஏற்பாடு செய்வார் என்று அறியப்படுகிறது.

அனுராதபுர புதிய நகரம்

ரூ. 1,500,000 செலவில் புதிய ரஸதாக்கள்

அனுராதபுரம், அக். 23

அனுராதபுரத்தில் புதிய நகர நிர்மாணத்துக்கு தகுந்த இடம் தெரிந்தெடுக்கும் வேலைகள் சமீபத்தில்தான் முடிவடைந்துள்ளன வென்றும் இப்பகுதிக்கு நுவரெலியாவில் இருந்து ஆரம்பிக்கும் ரஸ்தாவுக்காக சில வீடுகள் இடிக்கப்பட்டுவிட்டதால் அந்த வீடுகளில் உள்ளவர்களுக்கு தற்காலிகமாக இப்புதிய இடத்தில் இப்பொழுதுவீடுகள் அமைத்துக்கொடுக்கப்படுமென்றும் நிரந்தர வீடுகள் விரைவில் அமைக்கப்படுமென்றும் கூறப்படுகிறது.

மல்வத்து ஓயாவுக்கு மேல் பாலம் அமைப்பதும் புதிய திட்டத்தால் இடம் பெற்றுள்ளது இப்பாலத்துக்கு அத்திவாரக் கல் நாட்டுவது 1948 ஜனுவரிக்கு வைக்கப்படடுள்ளதாக தெரியவருகிறது. புதிய நகரின் வீதிகள் ரூ. 1,500,000 செலவில் அமைக்கப்படு மென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வீட்டை உடைத்து திருடினார்

எதிரிக்கு 18 மாதச் சிறை

கொழும்பு, அக். 24

கொள்ளுப்பிடியைச் சேர்ந்த ஸ்ரீமதி டக்ளஸ் ஜோன்ஸ என்பவர் வீட்டில் 1945 ஏப்ரல் 25-ம் தேதி வீட்டை உடைத்து புகுந்து சில பொருட்களை திருடியதாக சாமிதாசன் என்பவர் மீது குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் கொழும்பு அடிஷனல் ஜி-லா நீதிபதி திரு வ. ஈ. ராஜகாரியர் எதிரிக்கு 18 மாத சிறைத் தண்டனை விதித்தார்.

பெண்ணைகை துஷ்பிரயோகம் செய்ய பகிரங்க வாரண்டு

கொழும்பு, அக். 24

புறக்கோட்டையைச் சேர்ந்த திரு. டி. எஸ் அபயசூரிய என்னும் வர்த்தகரிடம் ரூ. 2000 சம்பந்தமாக (வங்கியில் பணமில்லாதிருக்க) ஒரு செக்கைக் கொடுத்து ஏமாற்றியதாக குற்றம் சாட்டப்பட்ட ஸ்ரீமதி புளோரன்ஸ் எக்கநாயகாவை கைது செய்ய மீண்டும் பகிரங்க வாரண்டு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் நல்லெண்ணத் தூதுவர்

இஸ்டான்புல், அக். 22

மத்திய கிழக்கு தேசங்களில் பாக்கிஸ்தான் தலைவர் முகம்மது அலி ஜின்னாவின் நல்லெண்ண தூதுவராக ஸர். பெரோஸ் கான் நூன் தற்போது சுற்றுப் பிரயாணம் செய்துவருகிறார். இஸ்தான்புல்லிலே இன்று வந்திறங்கிய அவர் சிலகாலம் இங்கு தங்கி இருப்பார் என்று தெரிகிறது. (ராய்ட்டர்)

திரிகோணமலையில் தீ விபத்து

ஆறு வீடுகள் சாம்பலாயின

சேதம் அதிகம்; தீயணைக்கும் படையினர் துரிதமாகச் சென்றனரா?

திரிகோணமலை, அக். 22

நேற்றிரவு 9-30 மணியளவில் மடத்தடியைச்சேர்ந்த சனீஸ்வரன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள ஆறு வீடுகள் எரிந்து சாம்பலாயின. அவ்வீட்டிலிருந்தோர் உடன் வெளியிலே சென்றுவிட்டனர் இத் தீவிபத்தில் ஒரு கிராமபோனும் 3 சைக்கிள்களும், 2 நாய்களும் அகப்பட்டுக்கொண்டன. ஓயில் மங்கர் தெருவைச்சேர்ந்த வைத்தியர் தம்பிப் பிள்ளை என்பவர் அவ்விடத்திற்குச் சென்றதாகவும் அவர் தீயில் அகப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அபாயகரமான நிலைமையில் இருப்பதாகவும்அறியப்படுகிறது. தீ எரியும்பொழுது மழை பெய்து கொண்டிருந்ததாகவும் பெட்ரோலின் வேகத்தால்கோரமான தீ பிடித்தெரிந்ததாகக் கூறப்படுகிறது.நெருப்பணைக்கும் படையினர்ஸ்தலத்துக்குவிரைந்துசென்றபோது யாவும் சாம்பலாயின திரு. அல்பெட் என்பவர் வீட்டில் இரு தகரங்களில் பெட்ரோல் இருந்ததாகவும் அதைத் திறந்து பார்க்கும் சமயம் நெருப்புப்பிடித்துவிட்டதாக அறியப்படுகிறது. அகதிகள் யாவரும் சனீஸ்வரன் கோவிலில் தங்கியிருக்கிறார்கள். நகர சபைத் தலைவரும் போலிஸாரும் ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டனர். நகர சபைத் தலைவர் அகதிகளுக்கு கூடிய உதவி செய்வதாகத் தெரிகிறது. (ந-நி)

மஞ்சூரிய யுத்தம்

கிரீஸ் நகரை கமியூனிஸ்டுகள் தாக்குகின்றன

சர்க்கார் தலைநகர் இருள்மயமாயிற்று

நாங்கிங், அக். 22

சர்க்கார் அறிக்கை தெரிவிப்பதாவது:- கமியூனிஸ்ட் படைகள் கிரீஸ நகரைமும்முரமாகத் தாக்குகிறார்கள். இந்நகர் வெளியுலகிலிருந்து துண்டிக்கப் பட்டிருககிறது. சர்க்கார் தலைநகரான செங்சுன் மின்சார விளக்கின்றி இருள்மயமாயிற்று சர்க்கார் துருப்புகள் பலமாக எதிர்த்துவருகிறார்கள்.

விளையாட்டு வினையாய் முடிந்தது

அச்சுவேலி, அக். 22

அச்சுவேலி ஆங்கிலப் பாடசாலையைச் சேர்ந்த ஓர் சிறுமி நேற்று பிற்பகல் பாட சாலை வளவில் உள்ள கிணற்றுக் கட்டில் ஓடி விளையாடுகையில் கால் தவறி கிணற்றுள் விழுந்துவிட்டாள். இச்சிறுமியுடன் கூட விளையாடிய மற்றைய பிள்ளைகள் மேற்படி சம்பவத்தைக் கண்டு பயந்து ஓடிவிட்டனர். தலைமை ஆசிரியரும் மற்றும் சிலரும் சத்தத்தைக் கேட்டு கிணற்றண்டைசென்றுபார்கையில் மேற்படி சிறுமி கிணற்றுள் கிடந்து தத்தளிக்கக் காணப்பட்டாள் உடனே அவள் வெளியே எடுக்கப்பட்டு உயிர் காப்பாற்றப்பட்டாள். (ந-நி)

நமது துறைமுக வர்த்தகம்

செப்டம்பர் வரை நஷ்ட விபரம்

கொழும்பு, அக். 23

செப்டம்பர் 30-ம் தேதிவரை இலங்கையின் துறைமுக வர்த்தகத்தில் துண்டு விழுந்த தொகை ரூ. 382,690 மட்டுமே என்று அறியப்படுகிறது. ஆகஸ்ட் 31 வரை கணிக்கப்பட்ட கணக்கில் ரூ. 5137,150 துண்டு விழுந்ததாக முன்னர் கூறப்பட்டது. இது கணக்குப் பிசகால் ஏற்பட்ட ஓர் பிழையாகும் என்று இப்போ கூறப்படுகிறது.

பணக்காரருக்கு அமித வரி

ஏழை விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு

செக்கோ சர்க்கார் நடவடிக்கை

பிரேக், அக். 22

5000 பவுண் பெறுமதியான சொத்தும் 250 பவுண் வருட வருமானமும் முள்ளவர்களுக்கும் அதற்கு மேற்பட்ட சொத்தும் வருமானமுமுள்ள பணக்காரர்களுக்கும் செக்கோ சர்க்கார் 2 முதல் 20 சத விகிதம் பண அமித வரி விதித்திருக்கிறார்கள்.

போதிய விளைவின்றி கஷ்டப்படும் ஏழை விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க நிதி தரட்டுவதற்கே புதிதாக இந்த பணக்கார வரி விதிக்கப்பட்டிருக்கிறது. பிளாக் மார்க்கெட்டியாபாரத்தில் பணக்காரர்களாகி இருப்போருக்கு நூறு சத விகிதம் வரி விதிக்கப்படுகிறது. [ராய்ட்டர்]

திரிகோணமலையில் காஸ்டிக் சோடா விநியோகம்

சரியாக நடத்துக என வர்த்தக மந்திரிக்கு வேண்டுகோள்

கொழும்பு, அக். 22

சவுக்காரம்செய்வதற்கு காஸ்டிக் சோடா திரிகோணமலையில் கிடைப்பது கஷ்டமாக விருப்பதாலும், சவுக்காரம் செய்வோருக்கு முறையாகக் காஸ்டிக் சோடா விநியோகிக்கப்படாதிருப்பதாலும்,வர்த்தக மந்திரி இதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று திரிகோணமலைப் பிரதிநிதி திரு. எஸ். சிவபாலன் கேட்டுள்ளார்.

முனிஸிபல் சபை எஞ்ஜினியர்

தற்காலிக பதவியில் இருந்து விலக்கும்படி கோரிக்கை

கொழும்பு, அக். 24

முனிஸிபல் சபை எஞ்ஜினியர் கர்னல் ஸ்டான்லி பெர்ஞன்டோ கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் தமது பதவியிலிருந்து ஓய்வெடுத்துக்கொள்வதற்கு 6 மாத காலத்துக்கு முன் தமக்குரிய ரஜாவை எடுத்துக்கொண்டதால் இந்த இலாகா நிர்வாகம் கொழும்பு முனிஸிபல் சபை ஜல சப்ளை இலாகா எஞ்ஜினியர் திரு ஸி. எம். ஜென்னிஸ் என்பவரால் கடந்த வருடம் ஜூன் மாதம் முதல் தற்காலிகமாக நடத்தப்பட்டது. இப்பொழுது இவர் தமது வேலையுடன் தற்காலிகமாக இதனையும் வகித்துவருவது சாததியமல்லவென்று தெரிவித்துள்ளதன்மேல் முனிஸிபல் சபை ஆலோசனை செய்துள்ளது. ஜனுவரி, 1, 1948 முதல் இவரை தற்காலிக பதவியிலிருந்து ஓய்வெடுத்துக் கொள்ள அனுமதிக்கும்படி தலைதாபன சர்க்கார் கமிஷனுக்குச் சிபார்சு செய்வதென முனிஸிபல் சபை முடிவு செய்துள்ளது.

கஞ்சாவும் அபினும் வைத்திருந்தவருக்கு ரூ. 100 அபராதம்

திரிகோணமலை, அக் 20

சென்ற 5-ம் தேதி கொடியாரம் வாசியாகிய அ. பக்கீர் தம்பி என்பவர் சட்ட விரோதமாய் கால் ராத்தல் அபினும் அரை ராத்தல் கஞ்சாவும் வைத்திருந்ததாக கலால் இலாக்காவைச் சேர்ந்த இன்ஸபெக்டர் திரு. ஜே. டபுள்யூ. ஜமொடர், (காட்; சுந்தரம், சிங்கராசா, போலிஸ் ஆகியவர்களாள் பிடிக்கப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கு இன்று மாஜிஸ்டிரேட் திரு. லோரன்ஸ டி. சொய்சா அவர்களால் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டு பலர் சாட்சியம் அளித்த பின் மாஜிஸ்டிரேட் எதிரியைக் குற்றவாளி யெனக் கண்டு எதிரிக்கு ரூ. 100 அபராதம் விதித்தார். (ந-நி)

ஸ்பெயின் விவகாரத்தில் பிரிட்டன் தலையீடு

பிராங்கோ சர்க்கார் கண்டனம்

மாட்ரிட், அக் 22

பிராங்கோ சர்க்கார் பத்திரிகையான 'அரிவா' பின் வருமாறு எழுதுகிறது:-

இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் சுதந்திரம் வழங்கியதாகப் பாசாங்கு செய்யும் பிரிட்டன், ஸ்பெயினை அடிமையாக்க விரும்புகிறது.ஸ்பெயினிலிருந்து வெளியேற்றப்பட்ட இரு அரசியல் தலைவர்களை பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி லண்டனில் சந்தித்துப்பேசியிருக்கிறார் பிரிட்டன் ஸ்பெயின் விவகாரங்களில் தலையிட்டு ஸ்பெயின் சர்க்காரைக் கவிழ்க்க முயற்சிப்பது கண்டு ஆச்சரியமடைகிறோம். (ராய்ட்டர்)

காலராவோடு போர்

எகிப்திய-கிரேக்க சர்க்கார் நடவடிக்கை

கெய்ரோ, அக். 22

காலரா நோய் எகிப்தில் ஆரம்பித்து நாளை ஒரு மாதம் பூர்த்தியாகி இரண்டாம் மாதம் ஆரம்பிக்கிறது. காலரா பரவுவதைத் தடுக்க இன்றிரவு தொடக்கம் நாலு நாளைக்கு ரயில் போக்கு வரவை நிறுத்தி விடும்படி அரசாங்கம் கட்டளையிட்டுள்ளது. இந்த நாலு நாட்களும் எகிப்திலே மிக முக்கியமான மத விடுதலை நாட்களானதால் ஒவ்வொரு வருடமும் இந் நாடகளில் ரயில்கள் மிக நெருக்கம் அடைந்து விளங்குவது வழக்கம்.

இந் நாலு நாட்களும் பொது நந்தவனங்கள் மூடப்படுவதோடு மயான பூமிகளுக்குச் செல்வதிலும் தடை விதிக்கப்பட்டுளளது.

ஏதென்ஸில் இருந்து வரும் ஒரு செய்திப் பிரகாரம் கிரேக்க அரசாங்கம் விமானமூலம் நகரில் டி. டி. ரி. கிருமி நாசினியைத் தெளித்து காலரா நோய் அங்கு புகுந்து விடாமல் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது. (ராய்ட்டர்)

ஐஸன் ஹோவர் அடுத்த ஜனாதிபதி?

வரும் அமெரிக்க தேர்தலில் அவர் கலக்கலாம்

ஜெருசலேம், அக் 22

அடுத்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி அபேட்சகராக யுத்தத்தின் போது பிரதம நேச தளகர்த்தராக விளங்கிய ஜெனரல் ஐஸன் ஹோவர் அநேகமாகப் போட்டியிடக் கூடும். மேற்படி விஷயம் அமெரிக்க உப ஜனாதிபதியாய் இருந்த ஹென்றி வாலஸால் இங்கு கூறப்பட்டது.

பாலஸ்தீனில ஓர் பத்து நாள் சுற்றுப் பிரயாணத்தை திரு. வாலஸ இப்போது செய்து வருகிறார். 'ஐஸன் ஹோவர் குடியரசுக் கட்சி, அல்லது ஜனநாயகக் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டால் மிக இலகுவில் வெற்றியை ஈட்டிக்கொள்வார்' என்றும் அவர் தெரிவித்தார். (ராய்ட்டர்)

இத்தாலி அந்நிய நாட்டு மந்திரி

பிரிட்டனுக்கு விஜயம்

ரோம், அக். 22

இத்தாலிய குடியேற்ற நாடுகளைப்பற்றியும் இத்தாலி-பிரிட்டன் உறவுபற்றியும் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியுடன் கலந்து பேச இத்தாலி அந்நிய நாட்டு மந்திரியான கவுண்ட் ஸ்போர்சான்ஸ் பிரிட்டிஷ் சர்க்கார் அழைப்பின் மீது பிரிட்டனுக்குப் பயணமாகிறார். [ராய்ட்டர்]

பார்லிமெண்டில் பர்மா சுதந்திர மசோதா

லண்டன், அக். 22

நாளை பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பர்மா சுதந்திர மசோதா பிரதம மந்திரி அட்லியால் கொண்டுவரப்படும்.

மேற்படி மசோதா பற்றி சர்ச்சைகள் இப்போ நடைபெறமாட்டா. (ராய்ட்டர்)

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு மருதானை

இன்று ஆரம்பம்! புத்தம் புதிய படம்!!

தினசரி மாலை 6-15 இரவு 9-30
சனியும்-ஞாயிறும் மெட்னி 3 மணிக்கு
சுவர்ணலதா-நஸீர் திறப்பட நடிக்கும்

வாமிக்-அஷ்ரா

என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்
சனி-ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும்
பால்கனிக்கும் 1-ம் வகுப்புக்கும் அரைச் சார்ஜ்
முன் இடம் தேடுங்கள்!

மன்னர் பிரான் பிரசங்கத்தின் மேல் குறை

சர்ச்சிலின் திருத்தப் பிரேரணை

லண்டன், அக் 22

நேற்றைய மன்னர் பிரான் பிரசங்கத்திற்கு ஒரு திருத்தப் பிரேரணையை கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் வின்ஸ்டன் சர்ச்சிலும் வேறு ஐந்து கன்சர்வேடிவ்களும் பிரேரித்துள்ளார்கள். அதில் "ஒரு பக்கச் சார்பான தனது கொள்கையை தொடர்ந்து நடத்தும் அரசாங்கத்தின் போக்குப் பிரதிபலிப்பதாக" அவர்கள் கூறுகின்றனர் அத்துடன் "மக்களது அதிகரித்துவரும் கஷ்டங்களின் மத்தியில் பொருளாதாரச் சீர்குலைவைச் சமாளிக்க அது வழிவகைகள் கூறவில்லை;தேசத்தைத் தலைமை தாங்கி நடத்தும் உறுதி அதில் காணப்படவில்லை" என்றும் அவர்கள் குறைகூறியுள்ளனர்.

இத்திருத்தத்திற்கு பழைய அயலநாட்டு மந்திரி அந்தோனி ஈடனும் கையெழுத்திட்டிருக்கிறார். (ராய்ட்டர்)

முடக்கப்பட்ட 40 கோடி டாலர்

அமெரிக்க அரசாங்கம் விடுவிக்கலாம்

லண்டன், அக். 23

அமெரிக்க அரசாங்கம் அநேகமாக பிரிட்டிஷ் கடனில்முடிக்கப்பட்டிருந்த கடைசி 40 கோடி டாலர்களையும் சில தினங்களுள் விடுவிக்க முன்வரலாம் என்று சில செய்திகள் கூறுகின்றன. இவை பெரும்பாலும் உண்மையான செய்தியே என்று விஷயம் தெரிந்த லண்டன் வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன.

பிரிட்டிஷ் பொக்கிஷ இலாகாவோ இது பற்றி அபிப்பிராயங்கள் கூற மறுத்துவிட்டது. [ராய்ட்டர்]

ஆசியா-அமெரிக்கா கலாச்சார உறவு

நியூயார்க்கில் புதிய ஸதாபனம்

நியூயார்க், அக். 23

ஆசிய ஆராய்ச்சி ஸ்தாபனமென்று இங்கு புதிதாக நிறுவப்பட்டுளள ஸ்தாபனத்தின் டிரஸ்டிகள் கூட்டத்தில் ஐக்கிய தேச அசெம்பிளிக்கு இந்திய பிரதிநிதிக் கோஷ்டி அங்கத்தினராக வந்திருக்கும் திரு பி சிவராவ் பேசியபோது, இந்திய நிலைமையை அறிய இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கு அந்த ஸ்தாபனத்தின் தலைவர் டாக்டர் ஆர்தர் போப் இந்தியாவுக்கு விஜயம் செய்வாரென்று தெரிவித்தார். ஆசிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்குமிடையே கலாச்சார உறவை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த ஸ்தாபனம நிறுவப்பட்டிருக்கிறது நவம்பர்முதல் அதன் வேலைகள் ஆரம்பமாகும். இந்தியாவில் ரூஸவெல்ட் சொந்தப் பிரதிநிதியாக விஜயம் செய்திருந்த வில்லியம் பிலிப்ஸ் இந்த ஸதாபனத்தின் இந்தியப் பகுதிக்குத் தலைவராக இருக்கிறார். இந்தியப் பகுதிக்கு ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டும, திரு. ஆஸப் அலியும் உப தலைவராக இருக்குமபடி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். [ராய்ட்டர்]

ரஷிய ஆயில் ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டது

பாரசீகத்தில் அமெரிக்க காங்கிரஸ் கோஷ்டி

டெஹ்ரான், அக். 23

இன்று பாரசீக பார்லிமெண்டில் 1946-வது வருடத்திய பாரசீக-ரஷிய ஆயில் ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டது. புதிய ஒப்பந்தம் செய்வதுபற்றி ரஷியாவுடன் சமரசப் பேச்சு நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு முன் பாரசீக பிரதம மந்திரி இந்த ஒப்பந்த சம்பந்தமான பெரிய அறிக்கையை பார்லிமெண்டில் சமர்ப்பித்தார். அதை வாசித்து முடிக்க 3 மணி நேரமாயிற்று.

பாரசீகத்திலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் துருக்கி சென்று துருக்கி அந்நிய நாட்டு மந்திரியைச் சந்தித்துப் பேசிவிட்டு இங்கு வந்தார். நேற்று அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் கோஷ்டியார் இங்கு வந்தார்கள் அவர்களை அமெரிக்க ஸ்தானிகர் நாளை பாரசீக மன்னருக்கும் பிரதம மந்திரிக்கும் அறிமுகம் செய்துவைப்பார். [ராய்ட்டர்]

சர்வ தேச தொழில் காரியாலயம்

ஆசிய வட்டார மகாநாடு

மொண்ட்ரீல், அக். 22.

அடுத்த திங்கட்கிழமை புதுடில்லியில் சர்வ தேச தொழில் காரியாலயதின் ஆசிய வட்டார மகாநாடு நடைபெறுகிறது. இதில் 20 தேசங்கள் பங்கு பற்றும் என்று தெரிகிறது.

சென்ற வசந்தத்தில் ஆசிய நாடுகளுக்கு சர்வ தேச தொழில் காரியாலய தூதுக்கோஷ்டி ஒன்று விஜயம் செய்தது. அதன் ஆராய்ச்சியில் பிறந்த அறிக்கை ஒன்று இங்கு சமர்ப்பிக்கப்படும். ஆசியாவின் கோடானுகோடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது எப்படி என்பது இங்கு ஆராயப்படும்.

1948ல் இன்னோர் ஆசிய வட்டாரமகாநாடுசீனாவில் கூட்டப்படும். (ராய்ட்டர்)

சாம்ராஜ்ய சலுகைகள்

கிரிப்ஸ் அறிக்கை சமர்ப்பிப்பார்

லண்டன், அக். 22

அரசாங்க இட்ட சம்பந்தமான விவாதத்தின்போது பொருளாதார மந்திரி ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் சாம்ராஜ்ய வர்த்தக சலுகைகள் பற்றி ஓர் அறிக்கை சமர்ப்பிப்பார். இன்று பர்மா மந்திரி லிஸ்டோவல்பிரபுவால் இவ்விஷயம் கூறப்பட்டது. (ராய்ட்டர்)

ஹட்டனில் சின்னம்மை

ஹட்டன், அக். 22

ஹட்டன் ஸ்ரீபாத கல்லூரி விடுதியில் சின்னம்மையால் பீடிக்கப்பட்ட இருவர் கண்டு பிடிக்கப்பட்டனர். விடுதியை ஒரு வார காலத்துக்கு மூடிவிட்டு இந்நோயால் பீடிக்கப்படாத மற்ற மாணவர்களை எல்லாம் அதிபர் வீடுகளுக்கு அனுப்பிவிட்டார். பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மலேயாவில் யாழ்ப்பாணப் பெண் கொலை

கணவன் கைது

ஜோஹோர்பாஹ்ரு, அக். 16

சிங்கப்பூரில் குமாஸ்தாவாக இருக்கும் சொக்கலிங்கம் (27 வயது) என்பவர் அவரது மனைவியை (18-வயது) கத்தியால் குத்திக் கொலை புரிந்ததாக குற்றம் சாட்டி போலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு பொன்டியன் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் 14-ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து அப்பெண் திரு வினாசித்தம்பி (தகப்பனார்) யுடனும். தனது கணவருடனும் மலேயாவுக்கு வந்து சிங்கப்பூரில் இடவசதி யில்லாததால் பொன்டியன் என்னுமிடத்தில் பெண்ணின் மாமனாவீட்டில் தங்கியிருந்ததாகவும் பெண் இறந்த தினத்தன்று கணவருடன் சிங்கப்பூர் சென்று புதிய வீட்டைப் பார்ப்பதாக இருந்ததாகவும் கூறப்பட்டது. பெண் கத்தியால் குத்தப்பட்ட காயத்துடன் பொன்டியன் ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டு சிறிது நேரத்தில் மரணமானதாகத் தெரிகிறது. இச்சம்பவம் நடப்பதற்கு ஒரு வார காலத்துக்கு முன்னதாகவே இவர்கள் இலங்கையிலிருந்து சிங்கப்பூர் வந்திருந்தனர்.

படையிலிருந்து விடுவிக்கப்பட்டவரின் வழக்கு

கொழும்பு, அக். 24

படையிலிருந்து கலைக்கப்பட்ட ஜே எச் ஜேம்ஸ் என்பவரை மறுபடியும் தம் கீழ் வேலைக்கு வைத்துக்கொள்ள மறுத்ததாக ஸர். ஜி. விஜயக்கூன் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்கு கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் முன் எடுக்கப்பட்டது. எதிரி குற்றவாளியல்லவென்று தெரிவித்ததன் மேல் நீதிபதி வழக்கு விசாரணையை 31-ம் தேதிக்கு ஒத்திவைத்தார். ஜேம் என்பவர் படையில் சேருமுன் ஸர். விஜயக்கூனிடம் வேலை பார்த்ததாகவும் இப்பொழுது அவர் வேலைகொடுக்க மறுத்துள்ளதாகவும் வழக்காளி தெரிவித்துள்ளார்.

துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல முயன்றதாக வழக்கு

கொழும்பு, அக். 24

நுகேகொடையில் மே மாதம் 2-ம தேதி மாலை சுமார் 7-30 மணிக்கு அதேயிடத்தைச் சேர்ந்த திரு ஆர். கே. சோமசுந்தரம் என்பவர் திரு. எஸ். எம். அல்பர்ட் என்னும் அல்பர்ட் சபராபது என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொல்ல முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கு கொழும்பு தெற்கு கோர்ட்டில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளி திரு. அல்பர்ட்டும் திரு. எஸ். பெரேராவும் சாட்சியமளித்த பின் மேற்கொண்டு விசாரணையை நீதிபதி 31-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட் டெட்டிற்காக, 1947-ம்ஆண்டு அக்டோபர் மீ 24உ இந்த பத்திரிகை 194A. தட்டாரத் தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org